janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 டிசம்பர் 17 - டிசம்பர் 23 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 37




# வடிந்த வெள்ளம்! வடியாத துயரங்கள்!

# அரசியலாக்கும் அற்ப முயற்சிகள்!



**வரலாறு காணாத மழை வெள்ளம் சென்னையை புரட்டி போட்டு ஓய்ந்திருக்கிறது. ஒருவாறாக மீண்டு வந்தாலும், ஓரிடத்திலும் நீர் தேங்காமல் உலர்ந்த சென்னையை பார்ப்பதற்கு இன்னும் சில வாரங்கள் கூட ஆகலாம்.**

ஆனால் வெள்ளம் வீட்டுக்குள் புகுந்ததால், பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் மிகப்பெரியது. அவ்வளவு சுலபத்தில் வடிந்து விட முடியாது. வாழ்க்கையில் தவிர்க்க முடியாத சாதனங்களாக மாறிப்போன டெலிவிஷன், வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், கிரைண்டர்,மிக்ஸி, டூ வீலர் போன்ற பொருட்களை வாங்குவது பல குடும்பங்களுக்கு கனவாக இருந்தது.

கட்டுக்கடங்காத செலவினத்தில் மிச்சம் பிடித்து, தவணை கட்டி வாங்கி வைத்த அந்த பொருள்கள் எல்லாம் வெள்ளத்தால் செப்பனிட முடியாத அளவுக்கு பழுதடைந்து விட்டன.

பொருட்கள் இழப்பு ஒரு பக்கம் இருந்தாலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கே அடித்தள மக்கள் பெரும்பாடு பட்டுள்ளனர்.

## புயல் பேரிடர் நிவாரண நிதிக்கு ரூ.10 லட்சம்



மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமாத சம்பளத் தொகைக்கான காசோலையும் வழங்கினார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.

ஆளை மூழ்கடிக்கும் அளவுக்கு வெள்ளம் வீட்டுக்குள் நுழைந்த பின்பு, இரண்டு குழந்தைகளை பரண் மீது தூக்கி வைத்து விட்டு தாய் சிலிண்டர் மேல் ஏறி நின்று தலை வெளியே தெரிய நாள் முழுக்க தண்ணீரில் இருந்த நிலையில் ஒரு குடும்பம்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# செவ்வணக்கம் தோழர் கானம் ராஜேந்திரன்!


**உடல் எரியூட்டப்பட இருந்த அவரது வீட்டை நோக்கி, கடைசியாகத் தமது தலைவரின் முகத்தை பார்த்துக் கொள்ள நீண்ட வரிசையில் வயது வித்தியாசம் இன்றி மக்கள் கூட்டம் அலைமோதியது.**

“லால் சலாம் சகாவு”, “லால்சலாம் ராஜேட்டே” எனும் முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. தமது தலைவர் இறந்து விட்டார் என நம்ப முடியாத அவர்கள் கதறி அழுதனர். “அவர் இறக்கவில்லை” என்றும் முழங்கினர்.

முழு அரசு மரியாதையுடன், கானம் என்ற ஊரிலிருக்கும், அவரது மூதாதைகள் இல்லத்தில், ஒரு புளிய மரத்தின் அருகே அவரது உடல் எரியூட்டப்பட்டது.

கானம் ராஜேந்திரன் டிசம்பர் 8ம் தேதியன்று, கொச்சியில் உள்ள ஒரு மருத்துவமனையில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். அதற்கு முன்னதாக சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவரது வலது கால் அகற்றப்பட்டிருந்தது. கட்சிப் பணிகளில் இருந்து மூன்று மாதம் அவருக்கு விடுப்பு அளிக்கப்பட்டிருந்தது.

அறுவை சிகிச்சைக்குப் பின்பு பத்திரிக்கையாளர்களிடம் பேசிய அவர் விரைவில் மீண்டும் களத்துக்கு வருவேன்



என்று கூறியிருந்தார். ஆனால் அது நிறைவேறவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி ஜனநாயக முன்னணி மட்டுமின்றி கேரள மக்கள் அனைவருக்கும் அவரது இறப்பு ஒரு அதிர்ச்சியூட்டும் செய்தியாக அமைந்தது.

அவரது உடல் கொச்சியில் இருந்து திருவனந்தபுரத்துக்கு தனி விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது. கட்சி அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் நடந்து கொண்டிருந்ததால், ஏஐடியுசி மாநில தலைமை அலுவலகமான பிஎஸ் நினைவகத்தில் அவரது உடல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

அதன் பிறகு சாலை வழியே, பேருந்தில் அவரது சொந்த ஊருக்கு உடல் எடுத்து செல்லப்பட்டது. வழியெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், கட்சியின் தேசிய செயலாளர் பினாய் விஸ்வம்,எம்.பி., கட்சியின் தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி பொருளாளர் எம்.ஆறுமுகம், கேரளா மாநில அமைச்சர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

1950 நவம்பர் 10ஆம் தேதி கோட்டயம் மாவட்டத்தில் உள்ள கூட்டிக்கல் என்ற கிராமத்தில் பிறந்தவர் கானம்.

வாழூர், என்எஸ்எஸ் கல்லூரியில்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

கட்சிக் கடிதம்

# அலைகடல் மீது தொலையும் வாழ்க்கை 4

# நிதியமைச்சர் நிர்மலாவின் நாடகம்





போர்க்குணமிக்க தோழர்களே!

**அண்டை நாடு மட்டுமல்ல, பகை நாடாக கருதப்படுகின்ற பாகிஸ்தான் எல்லையில் துப்பாக்கி சத்தம் கேட்குமேயானால் உடனடியாக பதில் அளிக்கும் நமது ஒன்றிய அரசு,**

வங்கதேச எல்லையில் நமது எல்லைப்படை வீரர்களை நிறுத்தி ஊடுருவலைத் தடுத்துவிடும் நமது ஒன்றிய அரசு,

இந்திய சீன எல்லையில் நமது இராணுவப் படையை நிறுத்தி இருக்கிறது ஒன்றிய அரசு,

இலங்கை என்ற மற்றொரு நாடு, நமது அண்டை நாடு, நமது நட்பு நாடு, நமது நாட்டு மீனவர்களை சுட்டுக் கொள்வதை வேடிக்கை பார்ப்பது ஏன்?

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய குடிமக்கள் இல்லையா?

நமது நாட்டு மண்ணைக் காக்கும் ஒன்றிய அரசு, நமது நாட்டிற்குரிய கடலை காக்க வேண்டாமா? நமது நாட்டு மக்களை (மீனவர்கள்) காக்க வேண்டாமா?

நமது நாட்டு கடற்பகுதியை காக்கத் தவறி அலட்சியப்படுத்துவது எவ்வகையில் நியாயம்?

இலங்கை கடற்படையால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதையும், நமது கடற்பகுதியில் இலங்கை கடற்படையினர் அத்துமீறி நுழைவதையும் ஒன்றிய அரசு அனுமதிப்பது ஏன்?

இவ்வாறு தன் இறையாண்மையை ஒன்றிய அரசு காக்க தவறி வருவது ஏன்?

பகை நாடு என்று சொல்லப்படும் பாகிஸ்தான் கடற்பகுதியில், நமது நாட்டு மீனவர்கள் தவறுதலாக மீன்பிடிக்க சென்றதற்கு, பகை நாட்டு கடற்படையினர் நமது மீனவர்களை ஒருபோதும் சுட்டுக் கொன்றது இல்லை. அடித்து துன்புறுத்தியது இல்லை. நமது மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தியது இல்லை. படகுகளைப் பறிமுதல் செய்து அவர்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றது இல்லை. நமது மீனவர்களின் ஆடைகள், ஆபரணங்களை பறித்துச் சென்றதும் இல்லை.

ஆனால், நட்பு நாடான இலங்கை கடற்படை மேற்கொள்ளும் நிலை என்ன?

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்து இலங்கைக்கு கொண்டு செல்கின்றனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட படகுகள் அந்நாட்டுக்கு சொந்தம் என நாட்டுடைமை ஆக்கப்படுகிறது.

நமது நாட்டு மீனவர்கள் படும் துன்ப துயரங்களுக்கு அளவே இல்லை.

தகப்பனை இழந்த பிள்ளைகள், தன் கழுத்தில் மாலையிட்டு, மஞ்சள் கயிறால் தாலி கட்டிய கணவனை இழந்திட்ட பெண்கள். அண்ணனை இழந்திட்ட தம்பிமார்கள், தங்கைகள்.

தம்பியை இழந்திட்ட அண்ணன்மார்கள். இவர்களின் துயரக் கதறல்கள் எந்நேரமும் கேட்டபடியே உள்ளது. இத்தகைய துயரம் அடுத்த நாட்டவனால் ஏற்படுவதை ஒன்றிய அரசு ஏன் கண்டுகொள்வது இல்லை?

எங்களின் தாய்மார்களும் சகோதரிகளும் பூவிழந்து, பொட்டு இழந்து விதவைக் கோலம் பூண்டிருப்பது ஒன்றிய அரசின் கண்களுக்குத் தெரியவில்லையா? அல்லது தமிழச்சி என்கிற காரணத்தால் கண்டுகொள்ளாமல் கண்ணை மூடி கொள்கிறீர்களா?

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி நல்ல வாய்வீச்சாளர் என்பதனை நாடல்ல, உலகமே அறியும்!

கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில், "பாஜக ஆட்சிக்கு வந்தால்.. நான் பிரதமர் ஆனால்.. தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பேன், பாதுகாப்பு அளிப்பேன்" என்று உறுதிபட கூறிச் சென்றார்.

பத்தாண்டு காலம் ஆகிவிட்டது. பிரதமரின் வாக்குறுதிகள் என்னவாயிற்று? என்று தெரியவில்லை.

நரேந்திர மோடி பிரதமர் ஆன 2014 முதல் இதுவரையில் தமிழக மீனவர்களின் படகுகள் ஒன்றல்ல, இரண்டல்ல 143 படகுகள் இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்டு இலங்கை வசம் உள்ளது. பயன்படுத்தாமல், யாருக்கும் பயன்படாமல் அவர்களது துறைமுகத்தில் அடைக்கப்பட்டுள்ள 143 படகுகளும், புதுவை மாநிலத்தைச் சேர்ந்த காரைக்கால் முதல் ராமேஸ்வரம் வரை உள்ள மீனவர்களுக்கு சொந்தமானது.

ஒவ்வொரு படகும் ரூ.40 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை மதிப்புள்ளவையாகும். எத்தனை லட்சம் கோடி என்பதனை கணக்கிட்டுப் பாருங்கள். இத்தகைய பெரும் இழப்புகளை சாதாரண மக்களான மீனவர்களால் தாங்கிக் கொள்ள முடியுமா?

இத்தகைய பெரும் பொருளாதார இழப்பை அவர்களால் எப்படி ஈடு செய்ய முடியும்?

இவை எல்லாம் மோடியின் ஆட்சிக்குத் தெரியாதா? நமது நாட்டின் ஆகப்பெரிய கடற்படை அறியாதா? ஒன்றிய அரசின் உளவுத்துறையினர் ஒன்றிய அரசுக்கு உளவு சொல்ல மாட்டார்களா?





கேரள மீனவர் இருவர் இத்தாலி கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு பத்து கோடி ரூபாய் இத்தாலி அரசிடமிருந்து இழப்பீடாக பெறப்பட்டது.

கேரள மீனவருக்கு பெறப்பட்ட இழப்பீடு தமிழ்நாட்டு மீனவர்களுக்குப் பொருந்தாதா?

கேரள மீனவர்களும் தமிழ்நாட்டு மீனவர்களும் இந்தியக் குடிமக்கள் என்பதில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா?

2004ல் ஆழிப்பேரலையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. கடற்கரை பகுதியில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களது படகுகள் பெரும் சேதத்திற்கு உள்ளாயின. அன்று மன்மோகன் தலைமையிலான ஆட்சி நடைபெற்றது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு, சேதமடைந்த ஒவ்வொரு படகிற்கும் அன்றைய அரசு ரூ.20 லட்சம் இழப்பீடாக வழங்கியது. அதன் மூலம் மீனவர்களின் துயரத்தை ஓரளவு துடைத்தது.

இயற்கை சீற்றத்திற்கு அன்றைய ஒன்றிய அரசு இழப்பீடு வழங்கியது. ஆனால் இன்றைய ஒன்றிய அரசு அந்நிய நாட்டால் ஏற்படுகின்ற பாதிப்பிற்கு பரிகாரம் காண மறுப்பது ஏன்?

கடந்த அக்டோபர் 30 அன்று கூட தமிழக மீனவர்கள் டெல்லி சென்று ஒன்றிய வெளியுறவுத்துறை இணை அமைச்சரை சந்தித்து, தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இலங்கை அரசால், கடற்படையால் இழைக்கப்படும் அநீதிகளை, கொடுமைகளை எடுத்துரைத்தனர். தீர்வு கிடைக்கவில்லை.

அண்மையில் நமது ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் (18.11.2023) இராமேஸ்வரம் வருகை தந்தார்.

இராமேஸ்வரம் மீனவர்கள் ஒன்றிய நிதி அமைச்சரை நேரில் சந்தித்து, இலங்கை கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களின் 22 படகுகளை பறிமுதல் செய்தும் மீனவர்களைக் கைது செய்தும் உள்ளனர். அவர்களை மீட்க வேண்டும் என முறையிட்டனர்.

உடனே அதே இடத்திலிருந்து அமைச்சர் தனது கைப்பேசி வழியாக இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு படகுகளை விடுவித்தும், மீனவர்களை விடுதலை செய்யவும் வழிவகை செய்தார்.

பாராட்டுக்குரிய இப்பணியை மேற்கொண்டதை தொலைக்காட்சிகளும் நாளேடுகளும் முதல் பக்கச் செய்திகளாக வெளியிட்டன. நொடிப் பொழுதில் சாதனை புரிந்துள்ளார் ஒன்றிய அமைச்சர்!

சாதனை படைத்திட்ட ஒன்றிய அமைச்சர் அவர்களே, 22 படகுகளை, மீனவர்களை உடனடியாக விடுவிக்க முடிந்த உங்களால், 143 படகுகளை மீட்க இயலாதா?

ஆண்டுக் கணக்கில் இலங்கை துறைமுகத்தில் பாழ்பட்டு நிற்கும் படகுகளை மீட்க முடியாதா? மீனவர்களுக்கு முன்னால் கைப்பேசியை இயக்கிய உங்களால், நீங்கள் அங்கம் வகிக்கும் ஒன்றிய அரசின், வெளியுறவுத்துறை அமைச்சரிடத்தில் அல்லது "சகலகலா வல்லவரான" மோடிஜியிடம் எடுத்துக் கூறி 143 படகுகளையும் மீட்க இயலாதா?


தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருவதை தடுத்து நிறுத்த இயலாதா? வெளிப்படையாகப் பேசுவீர்களா? வெளிப்படைத் தன்மையை தங்களிடத்தில் தமிழக மீனவர்கள் எதிர்பார்க்கலாமா?

தமிழ்நாட்டு மீனவ சகோதரர்களே! கதறிப் பயனில்லை. தீர்வுக்கு என்ன வழி என்பது குறித்து ஆழ்ந்து யோசிப்பதும் விவாதிப்பதும் அதன் மீது முடிவு எடுப்பதும், அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்திட, அமல்படுத்திட அமைப்பாகத் திரள்வதும், ஒன்றுபட்டுப் போராடி வெற்றி காண்பதுமே வழிவகை என்று வரலாறுகள் கூறுகின்றன.

நிறைவுற்றது

மீண்டும் சந்திப்போம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மீட்கப்பட்டுள்ளது.

இன்னொரு நிகழ்வில், வீடு மூழ்கி விட, உயிர் பிழைப்பதற்காக வீட்டுக் கூரை மீது ஏறி, இரண்டு பெண்களை கையில் பிடித்துக் கொண்டு தந்தை இரவு முழுக்கப் பெய்த மழையில் நனைந்து கொண்டே நின்றிருந்த அவலம் நெஞ்சை உலுக்குகிறது.

முதல் மாடி, இரண்டாவது மாடியில் குடியிருந்த மக்கள், நனையாமல் இருந்தாலும், பால், தண்ணீர், அரிசி எதுவும் கிடைக்காமல் அல்லற் பட்டிருக்கிறார்கள்.

சேதம் அடைந்த குடிசைகள், விசைப்படகுகள், நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள், வல்லங்கள், ஆடு மாடுகள், அழிந்த பயிர்கள் எனப் பார்த்து பார்த்து நிவாரணத் தொகையை தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது. இந்தத் தொகை வெறும் நிவாரணம் மட்டுமே. நிச்சயமாக இழப்பீடாக இருக்கவே முடியாது.

குடும்ப அட்டைகளுக்கு 6000 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெகுவான பாதிப்பு, ஓரளவு பாதிப்பு, மிக குறைந்த பாதிப்பு என இதில் பாகுபடுத்திப் பார்த்தால் அது தீராத பிரச்சனைகளுக்கே இட்டுச் செல்லும்.

சென்னை மாநகரம் விரிவடைந்து கொண்டே இருக்கிறது. ஒரு சதுர கிலோமீட்டரில் 28 ஆயிரம் பேர் நெருக்கியடித்துக் கொண்டு வாழும் நிலை உள்ளது.

சென்னையிலிருந்த ஏரிகள், நீர்நிலைகள் எல்லாம் இப்போது குடியிருப்பு பகுதிகளாக மாறிவிட்டன. விரிவாக்கப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அருகிலேயே





காலி மனைகளும் இருக்கின்றன. கட்டப்பட்ட வீட்டின் தரைதளத்திற்கும் காலி மனையின் தரைக்கும் இடையில் 10 அடிவரை உயர வித்தியாசம் உள்ளது.

நீரை வாங்கி சேமிக்கும் நீர்நிலைகள் சீரழிக்கப்பட்டு விட்டன.

கடல் மட்டத்தை விட சற்றே உயர்ந்திருக்கும் பகுதியாதலால், வெள்ள நீர் வழிந்து, கடலுக்குத்தான் சென்று சேர வேண்டும். தண்ணீரை கடலுக்கு கொண்டு செல்ல நான்கு பெரிய வடிகால்கள் மட்டுமே உள்ளன.

100 மில்லி மீட்டர் அளவு மழையைத் தாங்கும் திறன் தான் சென்னைக்கு உள்ளது. ஆனால் தாங்கும் திறனை விட நான்கு மடங்குக்கும் அதிகமாக ஒரே நாளில் மழை கொட்டித் தீர்த்து விட்டது. புயல் ஒரே இடத்தில் நகராமல் மையம் கொண்டிருந்ததால், பெரிய அலைகள் எழுந்து கடல் நீர் மட்டத்தை உயரப்படுத்தி விட்டன. கூவம், அடையாறு போன்ற ஆறுகளில் வழிந்து சென்ற தண்ணீரை கடலில் கலக்க விடாமல் சுவர் போல நின்று அவை தடுத்து விட்டன.

இதன் காரணமாக வழக்கமாக தண்ணீர் நிற்காத பகுதிகளிலும் கூட முழங்கால் அளவு தண்ணீர் தேங்கி நின்றது.

மழைக்கு முன்னதாகவே அரசு உரிய முன்னெச்சரிக்கையை செய்திருந்தது. ஆனால் இப்படி ஒரு மழை வரும் என மக்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அரசே கூட எதிர்பார்த்து இருக்காது. வெள்ளத்தின் துயரத்துக்கு ஆட்பட்டுள்ள மக்களிடம் இந்த விவரங்களை பேசுவதில் புண்ணியம் இல்லை. ஆனால் வெள்ளம் வடிந்த பின்பு இவற்றைப் பரிசீலிப்பது அவசியம்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் 3031 கிலோமீட்டர் நீளத்துக்கு மழை நீர் வடிகால்களை சீர்படுத்தி இருப்பதாகவும், 33 சிறு ஏரிகள், 16 இதர ஏரிகளை செப்பனிட்டு இருப்பதாகவும் மாநகராட்சி அதிகாரிகள் கூறுகின்றனர்.

மாநகரின் குறுக்கு நெடுக்காக நடந்து கொண்டிருக்கும் மெட்ரோ கட்டுமான பணி, நீர் வடிய செய்யும் முயற்சியில் பெரும் தடையாக இருப்பதும் உண்மை.

வழக்கமாக சென்னையை புயல் தாக்கும் போது அதிவேகத்தில் காற்றடித்து புயல் கரையை கடக்கும். மழையை விட காற்றின் வேகத்தில் அதிக சேதம் ஏற்படும். அண்மை காலத்தில் வீசிய வார்தா மற்றும் கஜா புயல்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவை

2015ஏற்பட்ட மழைவெள்ளத்தின் போது, அதிகபட்சமாக 330 மில்லி மீட்டர் மழை பெய்தது. ஆனால் இந்த மிக்ஜாம் புயல் சென்னைக்கு 90 கிலோ மீட்டர் தூரத்தில் நிலை கொண்டிருந்தது. மணிக்கு 5 கிலோ மீட்டர் கூட அது நகரவில்லை. நின்று சுழன்று அடித்ததால் மிக அதிக மழைப் பொழிவைக் கொடுத்துவிட்டது. 24 மணி நேரத்தில் 430 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது. கடந்த 73 ஆண்டுகளில் இப்படி ஒரு மழைப்பொழிவு ஏற்பட்டதில்லை என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

2015ல் செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியதும் கட்டுக்கடங்காமல் திறந்து விட்டதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதை மனதில் கொண்டு இப்போது முன்கூட்டியே செம்பரம்பாக்கம் ஏரி கட்டுக்குட்படுத்தப்பட்டு தண்ணீரை வெளியேற்றும் வகையில் திறக்கப்பட்டது. எனவே மனித தவறுதலால் வெள்ளப்பெருக்கு ஏற்படவில்லை.

சென்னை மாநகரம் கட்டுக்கடங்காமல் விரிவுபடுவதை தடுக்க வேண்டும் என்றால், புதிய தொழில்களை வேறு நகரங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். நீர் வடிவதற்கு தடை ஏற்படுத்தும் கட்டிடங்களை அகற்ற வேண்டும் என்றெல்லாம் ஏராளமான ஆலோசனைகள் சொல்லப்படுகின்றன. எத்தனை நடவடிக்கைகள் எடுத்தாலும் அவை சாமானிய மக்களின் குடியிருப்புப் பகுதிகளை அகற்றுவதோடு முடிவடைந்து விடுகின்றன. பணமும் அதிகாரமும் படைத்த ஆதிக்க சக்திகளின் பெரும் கட்டுமானங்களை உடைத்து அகற்றும் நிலைக்கு செல்வதில்லை.

இந்திய நாட்டின் மீது இந்தியாவின் மீது வேறு நாடுகள் போர் தொடுத்தால், அனைத்து தரப்பினரும் வேற்றுமைகளை மறந்துவிட்டு, நாட்டோடு சேர்ந்த நின்று ஒத்துழைப்பதை நம் நாடு கண்கூடாக பார்த்திருக்கிறது. மழை வெள்ளம், ஆழிப் பேரலை போன்ற இயற்கை பேரிடர் நிகழ்வுகளிலும் அதே ஒத்துழைப்பை நல்குவது அவசியம். பின்பு விமர்சனங்களை வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இந்த வெள்ளத்தைப் பயன்படுத்தி, மாநில அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே அரசியல் நோக்கத்தோடு திட்டமிட்டு சமூக ஊடகங்கள் வழியே பொய்ச் செய்திகள் பரப்பப்பட்டன.

அமைச்சர் மா. சுப்பிரமணியம் 20 சென்டிமீட்டர் அளவுக்கு மழை பெய்தாலும் கூட தாங்கும் வகையில் வடிகால்களை அமைத்து விட்டோம் என்று பேசிய காணொளி திரும்பத் திரும்ப வலைத்தளங்களில் பகிரப்பட்டு நையாண்டி செய்யப்பட்டது. ஆனால் பெய்தது 43 சென்டிமீட்டர் மழை என்பது வெளியில் தெரியவில்லை.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பேட்டி ஒன்று திரும்பத் திரும்ப வலம் வந்தது. அதில் அவர், முதல்வர் தொலைபேசியில் அழைத்து தொகுதியில் தண்ணீர் தேங்கி இருக்கிறதா என்று பார்க்க செல்லவில்லையா என்று கேட்டார் என்றும், எனது தொகுதியில் எங்கும் நீர் தேங்கி யிருக்கவில்லை என்று சொன்னதாகவும், அப்படியானால் வேறு தொகுதிக்கு போ என்று கூறினார் என்றும் விளக்கமாக பேசியிருந்தார்.

சென்னையில் தண்ணீர் தேங்கவில்லை என்று அப்பாவும் மகனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று இது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் இந்த பெருமழைக்கு முன்னதாக உதயநிதி ஸ்டாலின் பேசியது அது. சாதாரண மழை பெய்யும்போது எச்சரிக்கையோடு முதல்வர் இருக்கிறார் என்பதையே அவர் பகிர்ந்து இருந்தார். நவம்பர் 28ஆம் தேதி அன்றே, அமைச்சர்களை அழைத்து மற்ற வேலைகளை எல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு அவரவர் தொகுதிக்குச் சென்று நிலவரத்தை கவனிக்குமாறு முதல்வர் வழிகாட்டினார் என்பது ஊர் அறிந்த செய்தி.

மாநகராட்சி வழங்கிய உணவு பொட்டலங்களை வாங்கி வைத்துக் கொண்டு, ஒரு பெண்ணை அழைத்து அவர் கையில் கொடுத்து “இதை எல்லாம் மனுஷன் சாப்பிடுவானா என்று பேசு” என்று சொல்லி அதிமுகவினர் காணொளி பதிவு செய்ததையும் இந்த நாடு பார்த்தது.

வழக்கமாக ஆர்எஸ்எஸ் பாஜக தான் பொய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக மாறி இத்தகைய புனைவுக் கதைகளைப் பரப்பிக் கொண்டே இருக்கும். அதோடு 5 ஆண்டுகளுக்கு மேல் ஒட்டிக் கொண்டே இருந்ததன் விளைவாக, அதிமுகவுக்கும் அந்த நோய் பற்றிக் கொண்டது போலும்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் விடவும் முன்னேறிய நிலையில் உள்ள தமிழ்நாட்டை, தரம் தாழ்ந்து விட்டதாக சித்தரித்து ‘திராவிடத்தால் வீழ்ந்தோம்’ என்று பொய் அவிழ்த்து விடும் நாம் தமிழர் தம்பிகள், கிடைத்தது வாய்ப்பு என வறுத்தெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் வைப்பதில் தவறில்லை.

சென்னையை தூய்மைப்படுத்த இங்குள்ள மாநகராட்சி ஊழியர்கள் போதாமல், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்து துப்புரவு பணியாளர்கள் சென்னைக்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

நிரந்தர தொழிலாளர்களாக இருந்த உள்ளாட்சி தொழிலாளர்களை எல்லாம் அகற்றிவிட்டு அந்த இடத்தில் காண்ட்ராக்ட், அவுட்சோர்ஸ் தொழிலாளர்களை அரசு நியமித்துக் கொண்டே இருக்கிறது. சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களை ஆதிக்க சக்திகள் ஒட்டச் சுரண்டுவதற்கு இது வழி வகுக்கிறது.

நகரங்கள் விரிவடைந்தும் கூட, துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்கள் தலையில் கூடுதல் பணிச்சுமைகளை ஏற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இது நகரங்களை தூய்மையாக வைத்திருப்பதற்கு உதவாது என்பதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலமைச்சர் அவர்களை புயலுக்கு முன்பாகவே நேரில் சந்தித்து எடுத்துரைத்தனர்.

ஆனால் எப்படியாவது மாநில அரசின் மீது பழி சுமத்தி அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செயல்படுவது ஏற்கத்தக்கதன்று.

வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, இந்த அரசின் மீது மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வன்மத்தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் மக்கள், உண்மைகளுக்கும் பொய்களுக்கும் இடையிலான வேறுபாட்டை சரியாக கண்டு உணரும் திறன் மிக்கவர்கள்.

**- டி.எம்.மூர்த்தி**

## வினாடி - வினா

1 தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பழங்கற்காலத்தைச் சேர்ந்த கற்கோடாரிகளின் காலம்?

2 சென்னை மாநகராட்சித் தலைவராக (மேயர்) தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

3 ஐ.நா. பொது சபையில் ஒரு நாட்டுக்கு எத்தனை வாக்குகள் உண்டு?

4 இந்திய பத்திரிகைகளை கட்டுப்படுத்த பிரிட்டிஷார் கொண்டு வந்த சட்டம் எது?

5 புரட்சிக்குப் பிறகு சீனா சென்ற அமெரிக்க அதிபரின் பெயர் என்ன?

6 எர்னஸ்டோ சேகுவேரா இறந்தபோது அவருக்கு எத்தனை வயது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 37

# தேசபக்த சக்திகளே! நாட்டைக் காக்க எழுக!

தெலுங்கானாவில், தேர்வு செய்யப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்க இடைக்கால தலைவராக, மூத்த உறுப்பினரான அக்பருதீன் ஒவைசி நியமிக்கப்பட்டார். அவர் ஆறாவது தடவையாக தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.

அவர் முன்னிலையில் பதவி ஏற்க விருப்பமில்லை என்று பாரதிய ஜனதா உறுப்பினர்கள் எட்டு பேர் புறக்கணித்துள்ளனர்.

“எடுத்த எடுப்பிலேயே தனது தாஜா செய்யும் அரசியலை காங்கிரஸ் துவங்கிவிட்டது” என்று பாஜக குற்றம் சாட்டியுள்ளது.

அவரை நியமித்தவர் மாநில ஆளுநரான தமிழிசை சௌந்தரராஜன். அவரிடம் தான் பாஜக கேட்க வேண்டும். முஸ்லிம் மஜ்லிஸ் கட்சி பாஜகவின் ‘பி டீம்’ என்பது இப்போதும் நிரூபணம் ஆகிறது என்று பதில் அளித்துள்ளது காங்கிரஸ்.

அது மட்டுமில்லை. ‘குறைந்த வித்தியாசத்தில் தான் காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருக்கிறது. எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடும் அபாயம் உள்ளது” என்றும் பாஜக கூறியுள்ளது. கோவா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் போன்று, இங்கும் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி ஆட்சி மாற்றம் நடத்தப்படும் என்பதற்கான எச்சரிக்கையே இது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தரப்பட்ட அரசியல் சட்டம் 370 ஆவது பிரிவை ரத்து செய்தது செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இது பற்றி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். தேசிய மாநாட்டு கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா “ஜம்மு காஷ்மீர் நரகத்திற்கு போகட்டும். நீங்கள் எமது மக்களின் மனங்களை வெல்லப் போவதாக பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் நடவடிக்கைகள் மேலும் மேலும் அவர்களை விலக்கி வைப்பதாக இருக்கின்றன.

எங்களின் கடைசி மூச்சு இருக்கும் வரை நாட்டோடு சேர்ந்து நிற்போம். ஆனால் எங்கள் மக்கள் மதிக்கப்பட வேண்டும் என்று கேட்பது தவறா? நீங்கள் எங்களை நம்பவில்லை. அதனால் எங்களாலும் உங்களை நம்ப முடியாது” என்று கருத்து தெரிவித்துள்ளார்.

அவ்வளவுதான்! பாஜகவின் சமூக ஊடகப்பிரிவு, அவர் மீது பாய்ந்து, கடித்துக் குதறுகிறது. கடுமையான கண்டனங்களை வெவ்வேறு முனைகளில் இருந்து அனல் பறக்க கக்கி கொண்டுள்ளது.

பாஜக செய்தி தொடர்பாளராக பூனாவாலா, “திமுகவைப் போலவே பரூக் அப்துல்லாவும் பிரிவினைவாதம் பேசுகிறார். இதுதான் இந்தியா கூட்டணியின் உண்மையான முகம்” என்று பேசியுள்ளார்.

மாநில மக்களின் உரிமைகளை, சுயமரியாதையை, மாநில சுயாட்சியைப் பேசினாலே “பிரிவினைவாதிகள், தேசத் துரோகிகள்’ என்று பாஜக படம் எடுத்து ஆடுகிறது. அதன் ஒவ்வொரு அசைவிலும் ஜனநாயகத்தை மறுதலித்து, சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தும் ஆணவம் கொப்பளிக்கிறது.

விடுதலையின் போது, தனி நாடாக அறிவிக்கப்பட்ட காஷ்மீர் மீது பாகிஸ்தான் படையெடுத்தது. பரூக் அப்துல்லாவின் தந்தையான ஷேக் அப்துல்லா, பாகிஸ்தான் ஆட்சியை ஹிட்லரின் ஆட்சிக்கு ஒப்பிட்டு ஐநா சபையில் பேசியவர். காஷ்மீர் இந்தியாவோடு தான் இருக்க வேண்டும் என்று உறுதியாக நின்றவர்.

தேச விடுதலைப் போராட்டத்தைக் காட்டி கொடுத்து, பிரிட்டிஷ்காரர்களோடு நின்ற மூதாதையர்களை கொண்ட பாரதிய ஜனதா, விடுதலைக்குப் போராடியவர்களை எல்லாம் தேசத் துரோகிகள் என்று ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கிக் கொண்டே வருகிறது. இந்தியா கூட்டணியே தேச விரோதிகளின் அணிச் சேர்க்கை என கதை புனைகிறது.

காஷ்மீர் பிரச்சினையைப் பேசும்போது திமுகவை ஏன் இழுக்க வேண்டும்? 370 வது பிரிவை நீக்கி காஷ்மீர் மாநிலத்தை இரண்டு துண்டுகளாக பிரித்த போது, “தலையை தொட்டு விட்டோம் இனி கால்களைப் பார்க்க வேண்டும் என்று பாஜக அப்போதுபேசியது. தலை காஷ்மீர் என்றால் கால்கள் தமிழ்நாடு தானே!

இந்த போலி தேச பக்த கூட்டம், எதிர்க் குரல்களை அடக்க அவர்கள் மீது தேசத்துரோக குற்றத்தை சுமத்துகிறது. பல கோடி ரூபாய்களை செலவழித்து உருவாக்கியுள்ள சமூக ஊடக வலைப் பின்னல் மூலமாக, தான் உற்பத்தி செய்த பொய்களை ஒவ்வொரு அலைபேசிக்கும் கொண்டு சேர்க்கிறது.

அரசியல் சாசனம் வரையறுத்துள்ள கூட்டாட்சி முறைமையை குழிதோண்டிப் புதைப்பதை அது புனிதக் கடமையாகக் கொண்டுள்ளது. தனது ஆட்சியை நிலைபெறச் செய்வதற்காக வெறுப்புரசியலையே எப்போதும் முன்னிறுத்துகிறது. இந்திய நாட்டின் செழுமையான, பாரம்பரியமிக்க, பன்மைத்துவ பண்பாட்டைக் குலைத்து சீரழித்துக் கொண்டே இருக்கிறது.

தேசம் பின்னோக்கி இழுக்கப்படுவதை தடுத்து நிறுத்த, இன்னொரு விடுதலைப் போராட்டத்தை, தேசபக்த சக்திகள் நடத்தியாக வேண்டும்!



சு.தமிழ்ச்செல்வி ராஜா

# பண்டிகைகள் பெயரில்...



பழையன கழிதலும் ‘புதியன புகுதலும் தமிழர்கள் கண்டுபிடித்த பழமொழி பயன்படுத்தும் பொருட்கள் பயனற்று போய்விட்டால் தேக்கி வைக்காமல் தீயிட்டு அழிப்பதற்கே விழா எடுத்தார்கள் அதற்கு” போகி “என்று பெயர் வைத்தார்கள் இந்தப் பண்டிகை நமக்கு ஆச்சரியமாக தென்படவில்லை.

அறிவியல் வளர்ச்சியின் முதிர்ச்சியால் பல நடைமுறைகள் நீர்த்துப் போயின அவசரத்தை தெரிவிக்கும் தந்தி முறை,இலக்கியமாக போற்றப்பட்ட கடிதங்கள் எழுதும் முறை, பணம் அனுப்பும் “மணியாடர்” (Money Order) அனைத்தும் மடிந்து போயின.

பண்டைக்காலம் முதல் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஏர் கலப்பை பிரம்பு, மாடுகள், மரக்கால் காணாமல் போய் கண்காட்சிக்கு வந்து விட்டது. அது மட்டுமா?

வீதிகளில் பம்பரம் குத்துதல், பேய் பந்து அடித்தல், பளிங்குகளை வைத்து கட்டு பளிங்கி, குழி பளிங்கி, சம்பா பளிங்கி விளையாடிய இளம் பட்டாளங்களும், இளம் பெண்கள் சில்லுக்கோடு, ஆடு புலி ஆட்டம், பல்லாங்குழி, சக மாணவிகளை வரிசையாக நிற்க வைத்து தாண்டி விளையாடிய விளையாட்டுகள் (கல்)காய்களை வைத்து பாட்டு பாடி விளையாடியவர்கள்.

பனங்காயை வெட்டி வண்டி போல் செய்து ஓடி மகிழ்ந்த விளையாட்டுகள் அனைத்தும் காணாமல் போய்விட்டன. பாழாய் போன தேவை இல்லா பண்டிகைகள் மறையாமல் ஏழைகளின் உயிரை குடிப்பது தான் வாடிக்கையாகிவிட்டது. பண்டிகைகள் என்றால் ஆடலும், பாடலும் இருந்த இடத்தில் குடியும், கலவரமும்,கொலையும் சகஜமாய்ஆகிப் போயின.

ஜனவரி மாதம் வருடத்தின் முதல் நாள் அன்று குடித்துவிட்டு,கூத்தாடி வாகனங்களை விரைந்து ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்கள் ஏராளம்! ஏராளம்! இவை தேவையா?

ஜனவரியிலே ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி, ஆருத்ரா தரிசனம் போன்ற விழாக்களும் நடத்தப்படுகிறது பிப்ரவரியில் மகா சிவராத்திரி, சனி பெயர்ச்சி, திருவோண விரதம், மார்ச்சில் “மாசி மகம் ஹோலி பண்டிகை, ஸ்ரீராம நவமி தெலுங்கு வருடப்பிறப்பு, காரடையான் நோன்பு, ஏப்ரலில் பங்குனி உத்திரம், ஸ்ரீ வராஹாஜெயந்தி, தமிழ் வருடப்பிறப்பு அட்சய திதியை ஸ்ரீமத் சங்கரர் ஜெயந்தி, ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி, மேயில் ஸ்ரீ மீனாட்சி திருக்கல்யாணம் ஸ்ரீ கள்ளழகர் எதிர் ஹேவை, அக்னி நட்சத்திர பண்டிகை,ஸ்ரீ நரசிம்மர் ஜெயந்தி, ஸ்ரீ கள்ளழகர் வைகை எழுந்தருளால், சித்ரா பௌர்ணமி, புத்த பூர்ணிமா, ஜூன் மாதத்தில் வைகாசி விசாகம், ஆணி உத்தர தரிசனம், ஜூலையில் திருவடி பூரம், ஆகஸ்ட் மாதத்தில் ஆடிதபசு, ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை,கருட பஞ்சமி ஸ்ரீவரலட்சுமி விரதம், ஓனம் பண்டிகை, ஆவணி அவிட்டம், செப்டம்பரில் ஸ்ரீ மஹா சங்கடஹர சதுர்த்தி, கோகுலாஷ்டமி, ஸ்ரீ பாஞ் சராத்திரஜெயந்தி ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி மஹாளயப் பட்சம் ஆரம்பம் அக்டோபர்மாதத்தில் மகாபாரணி மஹாயஅமாவாசை நவராத்திரி ஆரம்பம் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, விஜயதசமி நவம்பர் மாதத்தில் கந்த சஷ்டி ஆரம்பம், கந்த சஷ்டி சூரசம்ஹார பெருவிழா, பரணி தீபம், திருக்கார்த்திகை திருவண்ணாமலை தீபம், ஸ்ரீ பஞ்சராத்திர தீபம், டிசம்பர் மாதத்தில் வைகுண்ட ஏகாதேசி, ஆருத்ரா தரிசனம் மாதம் தவறாமல் எத்தனை எத்தனை பண்டிகைகள்.

உழைத்துவியர்வை சிந்தி சம்பாதித்த பணம் சாதாரண மக்களிடம் இருக்கக் கூடாது என்பதற்காகவே பணத்தை பண்டிகைகள் மூலம் கடவுளை முன்னிறுத்தி பணச்சுரண்டலை செய்கிறது ஒரு கூட்டம். நரகாசுரன் செத்ததற்கு கடன் வாங்கி பலகாரங்கள் செய்து படையல் போடுவது தவறு என்று மாதர் அமைப்பில் இருக்கின்ற நாம் கலகம் செய்திருக்கின்றோமா ?

அட்சய திரிதியை அன்று தானம் வழங்குவதை மாற்றி அர்ச்சனைகள் ஆடம்பரமான நகைகள் வாங்கினால் செல்வத்தில் கொழிக்கலாம் என்ற விளம்பரத்தை நம்பி கடன் வாங்கி பெற்ற நகையால் கஷ்டங்கள் வந்ததே தவிர வாழ்க்கையில் உயர்ந்தோமா?

நரசிம்ம பல்லவனின் தளபதி பரஞ்ஜோதி இரண்டாம் புலிகேசி படையெடுத்து அதிசயமாக இருந்த கற்சிலையை கண்டான். அதையும் கொள்ளையடித்து வந்து மன்னனிடம் காட்டிய போது தான் பிள்ளையாரை தமிழ் மக்களுக்கு தெரியவந்தது. அந்தப் பிள்ளையாரை வைத்து தான் மதவெறியர்கள் அரசியலாக்கி பிள்ளையார் ஊர்வலம் என்கிற பெயரில வீதிகள் தோறும் இழுத்து கலவரத்தைத் தூண்டி அரசியல் லாபம் காணும் கூட்டத்தை தடுத்து இருக்கின்றோமா?

இந்த விழா தேவைதானா !மாமன்னர்அசோகச் சக்கரவர்த்தி கலிங்கத்தின் மீது படையெடுத்து வெற்றி கண்டு அரியணையில்அமர்ந்த போது பௌத்த பிச்சு ஒருவர் “மன்னா நீ வெற்றி பெறவில்லை,தோல்வி அடைந்து விட்டாய் !”என்று கூறியதும் நான் தோற்றேனா ? என்று கேட்க ஆம் மன்னா நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள் கலிங்கப் பிணங்கள் போர்களத்தைச் சென்று பாருங்கள் என்று கூறிய போது அதைக்கேட்ட மன்னன் கோபமின்றி போர்க்களத்திற்குச் சென்றான் ஆறாக குருதி ஓடிக்கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கானவர் குருதியில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான வீரர்கள் கை கால் துண்டிக்கப்பட்டு உயிர் ஊசலாடிக் கொண்டு “ஐயோ “ என்கின்ற அலறல் கேட்ட வண்ணமாக இருந்தது பருந்துகளும், கழுகுகளும், மிருகங்களும் பிணங்களையும்,உயிருக்குபோராடிக் கொண்டிருப்பவர்களையும் இரையாக்கி கொண்டு இருந்தது.

தன் நாடு அடிமைப்படக்கூடாது என்று வீரத்துடன் போராடிய பல்லாயிரக்கணக்கான சக வீரர்களும் ஐயோ !ஐயோ ! என்கின்ற குரல் ஒலிக்க இதையெல்லாம் கேட்டும் பார்த்தும் மனம் கலங்கி “நான் வெற்றி பெற வில்லை எனக்காக போராடிய சக வீரனை கூட என்னால் பாதுகாக்க முடியவில்லை !என் உரையில் இருக்கும் கத்தியையும் வாலையும் இனி நான் தொடேன் ! என்று தூக்கி வீசினான். ஆயுதங்கள் தூக்கி வீசிய நாள் ஆயுத பூஜையாகவும் வெற்றி கண்ட பத்தாவது நாள் விஜயதசமியாகவும் மாறிப் போகிறது. இவ்விழா பௌத்தத்தைச் சார்ந்தது. ஆனால் பிராமணம் இந்து விழாவாக மாற்றி வாகனங்களையும் வீட்டு பொருட்களையும் வணங்கும் பண்டிகையாக மாற்றியது. அதை நாம் பின்பற்றுவது சரிதானா?

“தமிழர்கள் கொண்டாடும் உகந்த பண்டிகை பொங்கல். பசியால் தேடல் வந்தது, தேடலினால் உழைப்பு வந்தது, உழைப்பால் வாழ்க்கை செழிப்பானது, செழிப்பாவதற்கு உதவி செய்த இயற்கைக்கும் விலங்கினங்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நற்பண்பை வெளிப்படுத்தும் சிறந்த பண்டிகை பொங்கல் பண்டிகை உணர்வோடு வெளிப்படுத்தும் காணும் பொங்கல் நான்கு நாட்கள் முற்போக்கு சிந்தனையோடு கொண்டாடும் பண்டிகையாக அமைந்திருக்கிறது. இது என்றென்றும் தேவையே.

பண்டிகைகள் என்கின்ற பெயரில் தெய்வங்களை முன்னிறுத்தி, மத பிற்போக்குத் தனத்தை முன்னிறுத்தி உழைப்பாளி மக்களை வாட்டி கடனில் இருந்து மீள முடியாத சூழ்நிலை உருவாகிறது. தேவையற்றவைகளை ஒதுக்கி மனமகிழ்வோடு இருந்திட புதிய சிந்தனை வழியை தேடுவோம் .

“விரல்கள் பேசத் தொடங்கி விட்டன, வாய் மௌனமாகிவிட்டது” இதனால் நம் பிள்ளைகளின் ஆரோக்கியம் குறைந்து வருகிறது. அதே நேரத்தில் முதலாளிகளின் விளம்பரத்தால் புதுப்புது புராணக் கதைகளை புகுத்தி பண்டிகைகளை பெரிதுபடுத்தி மக்களை ஈர்க்கின்ற வகையில் விளம்பரப் படுத்துவதால் தொலைக்காட்சியில் மூழ்கிய மக்கள் ஏமாந்து வாழ்க்கையில் கடனில் மூழ்கி சொல்ல முடியாத துன்பத்திற்கு உட்படுத்திக் கொள்கிறார்கள். இதிலிருந்து மீளுவோம், தேவை யில்லா பண்டிகைகளை புறக்கணிப்போம்.

தொடர்புக்கு: 9786877195


# அமெரிக்க எதிர்ப்பை மீறி நிறைவேற்றம்!

# ஐ.நா. போர்நிறுத்த தீர்மானம் நடைமுறைக்கு வருமா?



வ.மணிமாறன்

**வானம் சாம்பல் நிறமாகவும் நிலம் சிவப்பாகவும் இருந்தால்.. அது காசா. இரண்டு மாதங்களுக்கும் மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலை தாக்குதலில் பாலஸ்தீனம் எப்படி இருக்கிறது என்பதை இதைவிட வேறு வார்த்தைகளில் சொல்ல முடியாது.**




அமெரிக்காவின் பங்களிப்புடன் இஸ்ரேல் நடத்தி வரும் இந்தத் தாக்குதலில், அளவுக்கு அதிகமான ஆயுதங்களும் வெடிபொருட்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் எழும் புகை மண்டலத்தால் வானம் சாம்பல் நிறமாகவும் செத்து மடியும் பாலஸ்தீனர்களின் ரத்த வெள்ளத்தால் அந்தப் பகுதி நிலமே சிவப்பாகவும் காட்சியளிக்கிறது.

அக்டோபர் 7ஆம் தேதி முதல் இரண்டு மாதங்களுக்கும் மேலாக இஸ்ரேல் ராணுவம் வெறிகொண்டு தாக்குதல் நடத்தி வருகிறது. தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டிருந்த சில நாட்கள் மட்டும் குண்டு சத்தங்களும் சாம்பல் நிற புகையும் இல்லாமல் அமைதியாக இருந்தன. பின்னர் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன. மருத்துவமனைகள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் என விதிவிலக்கு இன்றி அனைத்து இடங்களிலும் குண்டு மழை பொழிகின்றது.

டிசம்பர் 11 ஆம் தேதி வரை நடத்தப்பட்ட தாக்குதலில், 18,693 பாலஸ்தீனர்கள் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 7,750 குழந்தைகள் இறந்துள்ளனர். 53,000 பேர் படுகாயமடைந்துள்ளனர். சுமார் 9,200 பேர் காணாமல் போயுள்ளனர்.

தற்போது தெற்கு காசா பகுதி மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. "மருத்துவமனைகளில் தஞ்சமடையுங்கள். வெளியே செல்லாதீர்கள். வெளியே செல்வது ஆபத்தானது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது" என்ற வாசகங்கள் அடங்கிய துண்டறிக்கைகள் வீசப்படுகின்றன.

தெற்கு காசாவில் குறிப்பான இடங்களை இலக்கு வைத்து, பீரங்கி குண்டுகள் வீசப்படுகின்றன. துப்பாக்கிச்சூடும் நடத்தப்படுகிறது. "வடக்கு காசா பகுதியில் இருந்த 24 மருத்துவமனைகளில் மூன்று மட்டுமே செயல்படும் நிலையில் இருப்பதாக" உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. படுகாயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க இடமில்லை. ஊர்தி நிறுத்துமிடங்கள், திறந்தவெளிகள் போன்றவையும் நிரம்பி வழிகின்றன.

வடக்கு காசாவில் இருந்து தெற்கு பகுதிக்கு தப்பிச் சென்ற பாலஸ்தீனர்களால், இரண்டரை லட்சம் மக்கள் தொகை கொண்ட ரஃபா நகரில், 15 லட்சம் பேர் குவிந்துள்ளனர். ஒரு குடியிருப்பில் மூன்று முதல் ஐந்து குடும்பங்கள் வரை வாழ்கின்றன, மசூதிகள், பள்ளிகள், சமுதாய கூடங்களில் வாழ்கின்றனர். எங்கும் கூட்டம் நிரம்பி வழிகிறது. தற்போது மழை பெய்கிறது. குளிர் அதிகரித்துள்ளது. ஊட்டச்சத்து வேகமாக குறைந்து வருகிறது.

23 லட்சம் பாலஸ்தீனர்களுக்கு சிகிச்சை அளிக்க 3,412 படுக்கைகள் கொண்ட 36 மருத்துவமனைகள் மட்டுமே இருக்கின்றன. தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளதால் அவசர சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், 15 மருத்துவமனைகள் மட்டுமே ஓரளவு செயல்படுகின்றன. அவற்றின் படுக்கை வசதிகளும் 1,500 ஆக குறைந்துள்ளன. இவற்றில் 12 மருத்துவமனைகள் தெற்கு காசாவில் உள்ளன. அவையும் நிரம்பி வழிகின்றன.

இனப்படுகொலை திட்டத்தை செயல்படுத்த முதலில், சுகாதார கட்டமைப்பை அழிப்பது அவசியமாகும். இதனைத் தான் இஸ்ரேல் செய்து வருகிறது. ஏற்கனவே மருத்துவ வசதிகள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அதனையும் அழிப்பது எத்தகைய பேரழிவை ஏற்படுத்தும் என்பதை நினைக்கும் போதே பதற வைக்கிறது.

இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு, அது பயன்படுத்திய வெடி மருந்துகளே பெரும் ஆதாரமாகும். மிகவும் அடர்த்தியாக மக்கள் வசிக்கும் காசா மீது 40 ஆயிரம் டன்னுக்கும் அதிகமான வெடிமருந்துகளை இஸ்ரேல் வீசியுள்ளது. இது ஹிரோஷிமாவில் பேரழிவை ஏற்படுத்திய அணுகுண்டுகளில் இருந்த வெடிமருந்துகளை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

இஸ்ரேல் ராணுவம், டிசம்பர் முதல் வாரம் வரை காசா மீது 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குண்டுகளை, அதாவது ஒரு நாளைக்கு ஏறத்தாழ 1,800 குண்டுகளை வீசியதாக கூறி இருக்கிறது. இவற்றில் அமெரிக்கா வழங்கிய 15 ஆயிரம் குண்டுகளும் அடக்கம். இதில் நிலத்தடி வசதிகளை அழிக்கும் 100 BLU109 வகை குண்டுகள், 900 கிலோ பதுங்கு குழிகள் அழிப்புக் குண்டுகள், 57 ஆயிரம் பீரங்கி குண்டுகள் வழங்கப்பட்டுள்ளன. பதுங்கு குழிகள் அழிப்புக் குண்டுகள் ஆறு அடிக்கு மேல் வலுவூட்டப்பட்ட கான்கிரீட்டையும் ஊடுருவி அழிக்கக் கூடியது.

மிக அதிகத்திறன் கொண்ட குண்டுகளையும் அதிக அளவிலான வெடி மருந்துகளையும் அமெரிக்காவின் உதவியுடன் இஸ்ரேல் பயன்படுத்தி வருவது ஏன்?

ஹமாஸ் அமைப்பை அப்புறப்படுத்துவதற்காக அல்ல. காசாவின் முழு சமூக கட்டமைப்பையும் சிதைப்பது, அதன் மூலம் ஒட்டுமொத்த பாலஸ்தீனர்களையும் அழிப்பது என்ற இனப்படுகொலையை நிறைவேற்றுவதற்காகத் தான் பெரும் வெறிகொண்டு தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் நடத்தி வரும் இந்தத் தாக்குதலில் செத்து மடிந்த பாலஸ்தீனர்கள் தவிர, எஞ்சியவர்கள் பட்டினியாலும் தொற்று நோய்களாலும் மெதுவாக, துன்புற்று சாக வேண்டும். இஸ்ரேல் அரங்கேற்றி வரும் இந்த பேரழிவை குறிப்பிட, இனப்படுகொலை, போர்க் குற்றம் போன்ற வார்த்தைகள் போதாது. புதிதாக உருவாக்க வேண்டும்.

இந்நிலையில், டிசம்பர் 12ஆம் தேதி அன்று ஐ.நா. பொது சபையில், போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. இறுதியாக, 193 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஐநா பொது சபையில் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், போர் நிறுத்தம் கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக 153 நாடுகள் வாக்களித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உட்பட 10 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக அதாவது, போர் நிறுத்தம் செய்வதற்கு எதிராக வாக்களித்தன. 23 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

குறிப்பான கால வரையறை, கட்டுப்பாடுகளைக் கொண்டிராத இந்த தீர்மானம், உலக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறது. "பன்னாட்டு சமூகத்தின் உணர்வுகளை புரிந்து கொண்டு இஸ்ரேல் போரை நிறுத்த வேண்டும்" என சவுதி அரேபியா அறிவுறுத்தி இருக்கிறது.

"காசா பூமியில் இருக்கும் நரகம்" என வேதனையுடன் கூறியுள்ள ஐ.நா., காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத விமான தாக்குதல்களும், ராணுவ முற்றுகையும் பேரழிவை ஏற்படுத்தக் கூடியன என்று எச்சரித்துள்ளது.

இதேபோன்று, டிசம்பர் எட்டாம் தேதி நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில், போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அமெரிக்கா தமக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தை (வீட்டோ) பயன்படுத்தி தீர்மானத்தை ரத்து செய்து விட்டது. இதனையும் மீறி ஐ.நா. பொது சபையில் தற்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தில் இருந்து தனிமைப்படுவதை உணர்ந்துள்ள அமெரிக்கா, தன்னுடைய குரலை சற்று மாற்றிப் பேச தொடங்கி இருக்கிறது. "இஸ்ரேல் வரலாற்றிலேயே மிக மோசமான பழமை வாத அரசு அமைந்திருக்கிறது. தன்னுடைய கடினமான போக்கை மாற்றிக்கொள்ள இஸ்ரேல் அரசு முன்வர வேண்டும். உலக ஆதரவை இழந்து விட்டதை உணர வேண்டும்" என அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

அதேநேரத்தில், இஸ்ரேலுக்கு தொடர்ந்து பேரழிவு ஆயுதங்களை அமெரிக்கா வழங்கி வருவது மிகவும் கொடூரமானது. மனித உரிமை, ஜனநாயகம் பேசிக்கொண்டே நடத்தி வரும் கேலிக்கூத்தான செயல்.

ஆனால் "பாலஸ்தீனத்துக்கு ஒரு அரசா?" என்று எதிர்ப்பு தெரிவித்துள்ள இஸ்ரேல், "இரண்டு அரசுகள் திட்டத்தை ஏற்க முடியாது. ஆஸ்லோவில் செய்த தவறை இஸ்ரேல் மீண்டும் செய்யாது. கடினமாக இருந்தாலும் தாக்குதல்கள் தொடரும்" என கொக்கரித்துள்ளது.

பாலஸ்தீனர்கள் மீது அமெரிக்க ஆதரவுடன் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் முடிவுக்கு வருமா? ஐ.நா. என்ன செய்யப் போகிறது? செத்து மடியும் பாலஸ்தீனர்களை பாதுகாப்பதற்கான போராட்டங்களை சர்வதேச சமூகம் எப்படி முன்னெடுக்க போகிறது?

தொடர்புக்கு:9600001224





# அதானி, மோடியை விமர்சிப்பதா?

# மஹுவா மொய்த்ரா எம்.பி. பதவி பறிப்பு



அருண் நெடுஞ்செழியன்

**நாடாளுமன்ற கூட்டத் தொடரில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மஹுவா மொய்த்ராவின் பதவியை எதேச்சதிகாரப் பாணியில் பறித்துள்ளது பாசிச மோடி அரசு.**

இந்தியாவின் ஏகபோக கார்ப்பரேட் அதானிக்கு எதிராக கேள்வி எழுப்புவதற்காக தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானி என்பவரிடம் பணம் பெற்றுக் கொண்டார் என்பதே மஹுவா மொய்த்ரா மீது பாஜக சுமத்தியுள்ள குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு ஜோடிக்கப்பட்டது என்பதை அவரது பதவி பறிப்புக்கு கடைபிடிக்கப்பட்ட அவசரகதிநடைமுறையே காட்டிக் கொடுத்துவிட்டது. முற்றிலும் நாடகப் பாணியில் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து எதிர்கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பதவியை பறிப்பது மோடி அரசுக்கு ஒன்றும் புதிதல்ல.

முன்னதாக மோடி திருடன் என்று கூறிவிட்டார் ராகுல் காந்தி என ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கிய கதையாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவசரகதியில் பறித்தது மோடி அரசு. பின்னர் உச்சநீதிமன்றம் தலையிட்டு ராகுல் காந்தியின் பதவி பறிப்பை ரத்து செய்து மோடி அரசுக்கு குட்டு வைத்தது.

ஆனாலும், அதானிக்கு எதிராகவும் மோடிக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் எந்த எதிர்க்கட்சித் தலைவர் பேசினாலும் அமலாக்கத் துறையை ஏவி அச்சுறுத்துவது அல்லது குறுக்கு வழியில் உறுப்பினர் பதவியை பறிப்பதை கொள்கையாக கொண்டுள்ளது பாசிச மோடி அரசு.

“ஜனநாயகத்தின் தாய் இந்தியா” என உலக அரங்கில் அலங்கார சொற்களால் உரைநிகழ்த்துகிறபிரதமர்மோடி,நடைமுறையிலோ இந்தியாவில் ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதில் முதல் ஆளாக செயல்படுகிறார். நாக்கில் பொய்யும் நடைமுறையில் ஒடுக்குமுறையும் செய்வது பாசிஸ்ட்களின் முக்கியப் பண்புகளில் ஒன்று என்பதன் எதார்த்த சாட்சியாகி வருகிறது மோடி அரசு.

### மோடி பிம்ப தகர்ப்பும் பதவி பறிப்பு அரசியலும்

பொதுவாக, பாரதிய ஜனதா கட்சிக்கும் ஆர்.எஸ்.எஸ்க்கும் நாடாளுமன்றக் கூட்டம் என்றாலே வேப்பங்காயாய் கசக்கும். தேர்தல் பரப்புரையில் நீட்டி முழங்கி நாடக உரை நிகழ்த்துகிற பிரதமர் மோடி, நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தாலே தலைப்புச் செய்தியாகிறது. பாஜகவிற்கும் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் ஏழாம் பொருத்தமாக இருக்கிற நிலையில், பாஜகவின் மக்கள் விரோத கார்ப்பரேட் ஆதரவை நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்துகிற உறுப்பினர்களை கண்டாலே வாந்தி பேதி வந்துவிடும்.

மோடி வலிமையான பிரதமர், புதிய இந்தியாவை உருவாக்குகிற தலைவர், உலகத் தலைவர் என புகழ் பாடுகிற பாஜக அடிப்பொடிகளுக்கு சம்மட்டி அடி கொடுக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் கர்ஜிக்கிற எதிர்கட்சி உறுப்பினர்களைக் கண்டாலே பாஜகவிற்கு நடுக்கம் வந்துவிடுகிறது. மோடி மீது திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்படும் பிம்பத்தை இவர்கள் சுக்கு நூறாக தகர்ப்பதால், இவர்களைக் கண்டாலே மோடி கும்பல் அஞ்சி நடுங்குகிறது.

அரசியல் விமர்சனங்களை ஜனநாயகப் பூர்வமாக எதிர்கொள்வதற்கு திராணியற்ற பாஜகவினர், நாடாளுமன்றத்தில் ஆதாரங்களுடன் கேள்வி கேட்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்களை மௌனிக்க செய்வதற்காக, நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற கேவலமான வகையில் பல குறுக்கு வழிகளை தேர்ந்தெடுத்திருப்பது இந்தியாவிற்கே வெட்கக்கேடு.

வெறும் அரை மணி நேரத்தில் விவாதம் நடத்தப்பட்டு, குற்றச் சாட்டிற்கு பதிலளிக்கக் கூட அவகாசம் வழங்காமல், எதிர்கட்சிகளின் கோரிக்கைகள் நிராகரிக்கபட்டு அவசர அவசரமாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பாஜகவினர் பறித்திருப்பது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கே கருப்புநாளாக அமைந்து விட்டது. நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த மஹுவா, ”என் மீதான குற்றச்சாட்டுகளை முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தவில்லை. எந்த ஒரு குற்றச்சாட்டும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை. எனக்கு நாடாளுமன்றத்தில் பேசக்கூட அனுமதி அளிக்கப்படவில்லை. பெண்கள், சிறுபான்மையினர் என அனைத்துத் தரப்பினரின் உரிமையையும் ஒன்றிய அரசு பறிக்கிறது. அதானி என்ற ஒருவருக்காக மட்டுமே இந்த அரசாங்கம் இயங்குகிறது” என்றார்.

### ஜோடிக்கப்பட்ட பின்னணி

மேற்கு வங்க மாநிலம் கிருஷ்ணா நகர் மக்களவைத் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர் மஹுவா மொய்த்ரா. மக்களவையில் தனது அடுக்கடுக்கான கேள்விகளால் பாஜகவை திணறடித்து வந்தவர். மக்களவைக்கு வெளியேயும் தனது சமூக வலைதளங்களில் பாஜகவிற்கு எதிரான விமர்சனங்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி வருபவர். இதனாலேயே இவரது சமூக வலைதளம் பல ஆயிரம் பேரால் தொடரப்பட்டு வருகிறது. மக்களவையில் சுமார் 61 கேள்விகளை இதுவரை எழுப்பியுள்ளார். இத்தனை கேள்விகளில் அதானி தொடர்பாக மட்டுமே சுமார் 50 கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இந்நிலையில்தான், அதானி குழுமம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பரியல் எஸ்டேட் தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானியிடம் இருந்து மொய்த்ரா பணம் பெற்றதாக பாஜக எம்பி நிஷிகாந்த் துபே மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் புகார் அளித்தார். துபாயை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானியிடம் போலியாக ஒரு வாக்குமூலத்தை கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டு, பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் நிஷிகாந்த் துபே இந்த குற்றச்சாட்டை முன்வைத்தாகக் கூறப்படுகிறது. நிஷிகாந்த் துபேவிற்கு இந்த ஆதாரங்களை மொய்த்ராவின் முன்னாள் கணவர் வழங்கியதாக கூறப்படுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை ஹிராநந்தானி குழுமம் மறுத்துள்ளது. ஏற்கனவே பதவி நீக்கத் திட்டம் வகுக்கப்பட்டதால், மக்களவைத் தலைவரும் இந்தக் குற்றச்சாட்டை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெறிமுறைக் குழு விசாரணைக்கு பரிந்துரைத்தார்.

நெறிமுறைக் குழுவோ குற்றம்சாட்டிய தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானியிடம் நேரடி விசாரணையும் செய்யவில்லை. உண்மைத் தன்மையையும் ஆய்வு செய்யவில்லை. மேலும் குற்றம் சாட்டப்பட்ட மொய்த்ராவிடமும் முறையாக விசாரணை நடத்தவில்லை. அவர் விசாரணைக்கு ஆஜரானபோது துபாயில் எந்த ஹோட்டலில் யாருடன் தங்கியிருந்தீர்கள்? என்ற அருவருப்பான கேள்வியை கேட்டவுடன் மொய்த்ரா எதிர்ப்பு தெரிவித்து வெளியேறி விட்டார். ஒரு பொய்யை உண்மையாக்க வேண்டுமானால் அதில் அரை உண்மை இருக்க வேண்டும் என்பது போல தர்ஷன் ஹிராநந்தானிக்கும் மொய்த்ராவிற்குமான தனிப்பட்ட அல்லது அரசியல் உறவை, மொய்த்ராவின் முன்னாள் கணவரை பகடைக் காயாக வைத்து பாஜக அரசியல் செய்துள்ளது மட்டுமே தெளிவாகிறது.

இந்நிலையில் அனைத்தும் ஏற்கனவே பாஜகவால் முடிவு செய்யப்பட்டதன்படி, மொய்த்ராவின் பதவியை பறிப்பதற்கு நெறிமுறைக் குழு அறிக்கை வழங்கியது. மொத்தத்தில் அதானியையும் மோடியையும் காப்பாற்ற நெறிமுறைக் குழுவும் மக்களவை தலைவரும் கச்சிதமாக வேலை செய்து சட்டப்பூர்வ வன்முறையின் துணையால் மொய்த்ராவின் பதவியை பறித்துள்ளனர்.

### அதானி குழுமத்தின் மோசடி

முன்னதாக மோடியின் நண்பர் என எதிர்க்கட்சிகளால் அழைக்கப்படும் அதானியின் பங்குச்சந்தை முறைகேடுகளை ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கை அம்பலப்படுத்தியது. அதற்கு முன்னதாக கடந்த ஜனவரி மாதம், அதானி குழுமம் மீதான ஹின்டன்பர்க் நிறுவனத்தின் ஆய்வறிக்கை நாட்டின் தலைப்புச் செய்தியானது. அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடி, வரி ஏய்ப்பு முறைகேடு உள்ளிட்ட பொருளாதார முறைகேடுகளை ஹின்டன்பர்கின் ஆய்வறிக்கை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியதால், பங்கு வர்த்தகத்தில் அதானியின் பங்குகள் அதிவேகமாக வீழ்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கத்து.

ஹின்டன்பர்க் அறிக்கை வந்த பின்னர் ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை, புலனாய்வு அமைப்பு போன்ற விசாரணை அமைப்புகளின் விசாரணை வளையங்களில் இருந்து அதானி தப்பவைக்கப்பட்டு, மோடி அரசால் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகிறார். ஒரு கட்டத்தில், உச்சநீதிமன்றம் தலையிட்டு அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடிகளை விசாரித்து அறிக்கை அளிக்கக் கோரி, பங்கு வர்த்தகங்களை ஒழுங்கு செய்கிற செபி அமைப்பிற்கு உத்தரவிட்டது. தற்போது அந்த விசாரணை என்ன ஆனது என்று யாருக்கும் தெரியாது.

அதானி குழுமம் காப்பற்றப்பட வேண்டும், மோடி பிம்பம் மீது ஒரு கீறல் கூட விழாமல் இருக்க வேண்டும். பாஜக ஆர்.எஸ். எஸ். சித்தாந்தத்தை, செயல்பாடுகளை எதிர்ப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கவே கூடாது என்பதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றனர். இதற்காக அமலாக்கத்துறை மூலம் எதிர்க்கட்சிகளை மிரட்டி ஒடுக்குவது; ஊடகங்களை மிரட்டி அச்சுறுத்துவது, நாடாளுமன்ற பதவியை ஜனநாயக விரோத முறையில் பறிப்பது போன்றவற்றை செய்து வருகின்றனர். இப்படிப்பட்ட ஆர்எஸ்எஸ், பாஜகவுக்கு முடிவு என்னவோ வெகு தொலைவில் இல்லை.





தொடர்புக்கு: 9842391963

# மருத்துவத்துறையில் மதசார்பின்மை காக்கப்பட்டு, பணிச் சுமையை குறைக்க வேண்டும்!



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**இளம் வயதில் மருத்துவர்கள் திடீர் மரணமடைவது எனும் சோக நிகழ்வு தொடர்ந்து கொண்டே உள்ளது. இது மிகுந்த வேதனை அளிக்கிறது.**

டாக்டர். மருதுபாண்டியன் என்ற 30 வயதேயான இளம் மருத்துவர் இரைப்பை குடல் அறுவை சிகிச்சைத் துறையில், சென்னை மருத்துவக் கல்லூரியிலும், அதனுடன் இணைந்த ராஜீவ் காந்தி மருத்துவமனையிலும் பயின்று வந்தார்.

24 மணி நேரத்திற்கும் மேல் தொடர்ச்சியாக அவர் பணிபுரிந்துள்ளார். பிறகு, அவரது அறையில் அவர் இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

அவருக்கு மூன்று மாதங்களுக்கு முன்புதான் திருமணமாகியுள்ளது. சமூக அக்கறை உள்ள மருத்துவர். அவரது மரணம் மிகுந்த அதிர்ச்சியை, வேதனையை தருகிறது. கடும் பணிச்சுமையால் ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக அவர் இறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அவரது மரணத்திற்கான காரணம் என்ன என்பதை நேர்மையான,வெளிப்படையான விசாரணை மூலம்,உடற் கூறாய்வு மூலம் கண்டறிய வேண்டும்.

மரணத்திற்கு காரணமான காரணிகள் குறித்து ஆராய, ஓர் நடுநிலையான நிபுணர் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்திட வேண்டும்.

டாக்டர். மருதுபாண்டியன் குடும்பத்திற்கு ரூபாய் 1 கோடி இழப்பீடு தமிழ்நாடு அரசு வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களும், பட்ட மேற்படிப்பு மாணவர்களும் 24 மணி நேரம் வரை வேலை செய்ய வைக்கப்படுகின்றனர்.

இத்தகைய கடும் உழைப்புச் சுரண்டல் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இது , சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தொடுத்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவிற்கு எதிரானதாகும்.

சென்ற ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் மாணவர் ஒருவர் கூடுதல் பணி நேரம், பணிச்சுமை,மற்றும் டார்ச்சர் காரணமாக தற்கொலை செய்து கொள்ளப் போவதாக, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத் அவர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் குறுஞ் செய்தி அனுப்பினார். நமது தலையீட்டால் அத்தற்கொலை தடுத்து நிறுத்தப்பட்டது.

* சென்னை அயனாவரம் இஎஸ்ஐ மருத்துவமனையில் 24 மணி நேரப் பணிக்குப் பிறகு வீடு திரும்பிய இளம் மருத்துவர் சோலைச்சாமி இரண்டு நாட்களுக்கு முன்பு மாரடைப்பால் இறந்துள்ளார்.

இது போன்று ஏராளமான இளம் மருத்துவர்கள் பணிச்சுமையால் பாதிக்கப்படுகிறார்கள். மரணம் ஏற்படுவதும் அதிகரித்து வருகிறது.

மருத்துவர்களின் பணி கடுமையான பணி. அப்பணியில் 24 மணி நேரப் பணி என்பது கடும் பாதிப்பை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் ஏற்படுத்துகிறது.



எனவே, 24 மணி நேர பணி என்பதை அரசு மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட ,வட்டார மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

24 மணி நேரப் பணியால், இனியும் மருத்துவர்கள் பாதிக்கப்படக்கூடாது.யாரும் பலியாவது கூடாது. இப்பிரச்சினையில் தமிழ்நாடு அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்.

* பயிற்சி மருத்துவர்கள் (Interns) முதுநிலை (PGs) மற்றும் உயர் சிறப்பு மருத்துவ மாணவர்கள் (SuperSpeciality) 24/36/48 மணி நேரம் வரை தொடர்ச்சியாக பணி செய்ய நிர்பந்திக்கப்படுகின்றனர்.

இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இக்கொடுமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

* அரசு மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள் (Interns) முதுநிலை (PGs) மற்றும் உயர் சிறப்பு மருத்துவ மாணவர்கள் (SuperSpeciality), செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்களின் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில்,ஆரம்ப சுகாதார நிலையங்களில், எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

அதற்கேற்ப கூடுதலாக, மருத்துவர்களையும், செவிலியர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் தமிழ்நாடு அரசு நியமிக்க வேண்டும்.

* மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள், மருத்துவ மாணவர்களை மிரட்டுவதையும்,கொத்தடிமைகளைப் போல் நடத்துவதையும் உடறடியாக கைவிட வேண்டும்.அவர்களின் ஜனநாயக உரிமைகளை பறிப்பதை கைவிட வேண்டும்.

மாரடைப்பு உள்ளிட்ட காரணங்களால், பல இளம் மருத்துவர்களின் உயிரை பலி கொள்கிறது. மருத்துவர்களின் சராசரி ஆயுட்காலம் குறைகிறது.

இவை அனைத்தையும் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள பல்வேறு மருத்துவ ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.

எனவே, மருத்துவர்களின் பணிச்சுமை குறைக்கப்பட வேண்டும். “மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களின் நலன் காக்க நல வாரியம்,” அமைத்திட வேண்டும்.

* சென்னை மருத்துவக் கல்லூரி முதுநிலை மருத்துவ மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேற்றப்பட்டு, கிண்டி அருகே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையிலிருந்து தொலைவான இடத்தில் முதுநிலை மருத்துவ மாணவர்களை தங்க வைப்பது, தேசிய மருத்துவ ஆணையத்தின் விதி முறைகளுக்கும் எதிரானதாகும்.

எனவே, அவர்களுக்கு ராஜிவ் காந்தி மருத்துவமனை அருகிலேயே தங்கும் வசதியை செய்து கொடுக்க வேண்டும். புதிய விடுதியை விரைவாக கட்டிக் கொடுத்திட வேண்டும்.

**# தேசிய மருத்துவ ஆணையத்தின் இலட்சினையில் (Logo) இருந்த “இந்தியா” வை நீக்கி விட்டு “பாரத்” எனப் பெயர் சூட்டி இருப்பதும், அதில் ‘தன்வந்திரி’ என்ற இந்து கடவுளின் படத்தை பொறித்திருப்பதும் மருத்துவக் கல்வியில், மருத்துவ துறையில் மதத்தையும், ஆன்மீகத்தையும் திணிப்பதாகும்.**

‘இந்துத்துவ’ கருத்தியலை திணிப்பதாகும்.மதச்சார்பற்ற நாட்டில், இதை ஏற்க முடியாது. உடனடியாக இதை கைவிட வேண்டும்.

அதேபோல் சுகாதார மற்றும் நலச்சங்கங்களுக்கு “ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்” என , ஒன்றிய அரசு பெயர் சூட்டி இருக்கிறது.

அனைத்து மாநில அரசுகளும் அவ்வாறு பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறது.இது மாநில உரிமைகளுக்கு எதிரானது. மேலும், இந்தி சமஸ்கிருத திணிப்பாகும். இந்துத்துவ திணிப்பாகும் .

இது மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவச் சேவையில் நிலவும், மதச்சார்பற்ற நிலையை சீர்குலைக்கும் செயலாகும்.

ஏற்கனவே, 1.61 லட்சம் துணை சுகாதார நிலையங்களுக்கு “சுகாதார மற்றும் நல வாழ்வு மையம்( Health and Wellness Centre) என பெயர் சூட்ட ரூபாய் 1200 கோடிகள் செலவு செய்யப்பட்டது.

தற்போது, மீண்டும் 1.61 லட்சம் சுகாதார மற்றும் நல வாழ்வு மையங்களை “ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்” எனப் பெயர் மாற்றம் செய்வதற்காக ,ஒரு மையத்திற்கு ரூ 3000 செலவு செய்யப்பட உள்ளது. இது அவசியமற்ற பொருளாதாரச் செலவையும் ஏற்படுத்தும்.

எனவே, இத்தகையப் பெயர் மாற்றத்தையும், இந்தி சமஸ்கிருதத் திணிப்பையும், இந்துத்துவத் திணிப்பையும் ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

மருத்துவக் கல்வியிலும், மருத்துவச் சேவையிலும் மதச்சார்பின்மையை காத்திட வேண்டுமென ,சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் , ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களில் (ICTC) பணிபுரியும் ஊழியர்களுக்கும் ,அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் (ICTC) ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போல், 15 விழுக்காடு ஊதிய உயர்வையும், நிலுவைத் தொகையையும் வழங்கிட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

அப்பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பும், பணி நிரந்தரமும் வழங்கிட முன்வர வேண்டும்.

## தூய்மை பாரத இயக்கப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்குக!

### ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்!

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அளவிலான கூட்டம். மாவட்ட தலைவர் தட்சினாமூர்த்தி, டேங்க் ஆப்ரேட்டர் அமைப்பின் மாநில செயலாளர் சேதுராமன் தலைமையிலும், மாவட்ட ஒருங்கினைப்பாளர் ராம்குமார் முன்னிலையில், விருதுநகர் ஏஐடியுசிஅலுவலகத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திண்டுக்கல் பெ.கிருஷ்ணசாமி திண்டுக்கல்லில் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டின் நோக்கங்களை விளக்கி பேசினார்.இதில் ஊக்குநர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர செயலாளர் முத்துக்குமார், சக்கணன் ஆகியோர் வாழ்த்தப் பேசினர்.

தூய்மை பாரத இயக்கம் ஊக்குவிப்பாளர்களுக்கு.குறைந்த பட்ச கூலி சட்டத்தின் படி மாத ஊதியம் ரூபாய் 11848/வழங்க வேண்டும்.

மேல்நிலை குடிநீர் தொட்டி இயக்குபவர்களுக்கு ரூ13848 ஊதியமும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள்..பள்ளிச் சுகாதார தூய்மை பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின் படி ரூபாய் 11848 காலமுறை ஊதியம் இஎஸ்ஐ..பிஎப் வசதி செய்து கொடு.

அனைத்து திட்ட கணினி இயக்குநர்களுக்கும் சம வேலைக்கு சம ஊதியம் இளநிலை ஊழியர்களுக்கு இணையான ரூபாய் 30000 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மிக்ஜாம் புயல் நிவாரணம்

***செங்கல்பட்டு:*** மதுராந்தகம் தாலுகா சிதண்டி ஊராட்சி மாமண்டூர் ஊராட்சியில் மழையில் பாதிக்கப்பட்ட பழங்குடிஇன மக்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், வழக்கறிஞர்சி.ஸ்டிபன்குமார் ஆகியோர் இருபத்தைந்து குடும்பங்களுக்கு தார்பாய் வழங்கினர். இதில் கிளை செயலாளர் செ.இன்பராஜ் மற்றும் கிளை தோழர்கள் பங்கேற்றனர்.



***வேதாரண்யம்:*** சென்னையில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேதாரணிய ஒன்றியம் தானி கோட்டகம் ஊராட்சி மன்ற தலைவர் பா. முருகானந்தம், தகட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி, பாலகுரு, பஞ்ச நதி குளம் மேற்கு ஊராட்சி மன்ற தலைவர் மணிமேகலை, சிவகுரு பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் ஆகியோர் வேதாரணியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் முன்னிலையில் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

# வெள்ள நிவாரணம் பற்றி தவறான தகவல் பரப்புவதை பாஜக நிறுத்திக் கொள்ள வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவுறுத்தல்**

வெள்ள நிவாரணம் பற்றி தவறான தகவல் பரப்புவதை பாஜக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது

மிக்ஜம் புயல் தாக்குதலில் சென்னை பெருநகரும் அதன் சுற்றுவட்டார புறநகர் மாவட்டங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை குலைந்து போனது. வரலாறு காணாத இயற்கை பேரிடரில் இருந்து மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து, அவர்களது மறுவாழ்வுக்கு உதவிடும் நிவாரண பணிகளில் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களும், தலைமைச் செயலாளர், மாநகர ஆணையர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் முதல் தூய்மைப் பணியாளர்கள் வரை அணிதிரண்டு தீவிரமாக பணியாற்றி வருகின்றனர். இதனிடையே, ஒன்றிய அரசு ஆயிரம் கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கியிருப்பதாக பாஜகவினரும் அதன் ஆதரவாளர்களும் தவறான செய்தியை பரப்பும் மலிவான செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒன்றிய அரசு இயற்கை பேரிடர் நிவாரண நிதியில் இருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை ஆண்டு தோறும் வழங்கி வருகிறது. இதன்படி நடப்பு நிதி ஆண்டுக்கான முதல் தவணையாக ரூ.450 கோடியை கடந்த ஜூலை மாதம் வழங்கியது. இரண்டாவது மற்றும் இறுதித் தவணையாக இந்த நிதியாண்டின் இறுதியில் வழங்க வேண்டிய தொகையை ரூ.491 கோடியை தற்போது வழங்கியுள்ளது. இந்த உண்மை நிலையை கருத்தில் கொண்டால் ஒன்றிய பாஜக அரசு மிக்ஜம் புயல் பேரிடர் கால நிவாரணத்திற்காக சல்லிக்காசு கூட கொடுக்காமல் வாய் சவடால் பேசி வருவதை தமிழ்நாட்டு மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளப் பாதிப்பை தொடர்ந்து "வெள்ளத் தடுப்பு மேலாண்மை திட்டம்" வகுக்கப்பட்டது. ஒன்றிய அரசின் சார்பில் ரூ.500 கோடி மதிப்பில் நிறைவேற்றப்படும் இந்தத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு தற்போது தான் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக நிதி ஏதும் ஒதுக்கவில்லை.

இந்த நிலையில் அடிப்படையற்ற ஆதாரமில்லாத செய்திகளை பரப்பி வருவதை பாஜகவினரும், சங் பரிவார் ஆதரவாளர்களும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும், தமிழ்நாடு அரசு கோரியுள்ள ரூ.5060 கோடியை முழுமையாக வழங்க ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்று இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குக

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி வாலாஜாபாத் ஒன்றியத்துக்கு உட்பட்ட, கீழ் கொட்டிவாக்கம் சுபேதார் நகர் குடியிருப்பில் 10 ஆதி திராவிட குடும்பங்கள் 15 ஆண்டு காலமாக மின் இணைப்பு இல்லாமல் அவதிப்படும் நிலை இன்று வரை நீடிக்கிறது. இதனால் பிள்ளைகள் படிக்க முடியவில்லை. எனது இந்த குடியிருப்பு பகுதிக்கு மின்சாரம் வழங்க கோரி காஞ்சிபுரம் மாவட்ட ஏ ஐ டி யு சி மற்றும் கட்டிட தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து கொடுத்தனர். இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஏ ஐ டி யு சி பொதுச் செயலாளர் ஏ. மூர்த்தி, கட்டிட தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ். கருணா, மாதர் சங்க மாவட்ட தலைவர் டி. ரேணுகா தேவி, கே. உஷா, எஸ். பாஸ்கரி, வி. கலைச்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



த.லெனின்

# சிறப்பு பிரிவு 370 நீக்கம்! அரச… மாநில …

**ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த அரசமைப்பு சட்டப்பிரிவு 370 ஐ ரத்து செய்தது செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அங்கு வரும் 2024 செப்டம்பருக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.**



ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு டிசம்பர்11 அன்று தனது தீர்ப்பை வழங்கியது.

தீர்ப்பை வாசிப்பதற்கு முன்பாக, இந்த வழக்கில் 3 விதமான தீர்ப்பு உள்ளதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்து விட்டு பின்னர் தீர்ப்பை வாசித்தார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370 தற்காலிகமானதே!

சட்டப்பிரிவு 1 மற்றும் 370ன் படி ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி.

சட்டப்பிரிவு 370 ஏற்படுத்தப்பட்டது என்பதே இடைக்கால ஏற்பாடு மட்டுமே

சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்வதற்கு இந்திய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பிறகு அது தனது தனித்த இறையாண்மையைக் கொண்டிருக்கவில்லை என்று சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் ஒருங்கிணைக்கவே சட்டப்பிரிவு 370 உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து அதனை பிரிப்பதற்காக அல்ல. சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்வதற்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. இதற்காக அவர் சட்டப்பிரிவு 370(3)ஐ பயன்படுத்தியதில் தவறு ஒன்றும் இல்லை. குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது செல்லுபடியாகும். சட்டப்பிரிவு 370(1)(d)ன்படி அரசியலமைப்பின் அனைத்து விதிகளையும் ஜம்மு காஷ்மீருக்குப் பயன்படுத்தலாம். ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ய மாநில அரசின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை. என்று கூறியதுடன் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது செல்லும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

இந்தியாவில் 68% க்கு மேல் இஸ்லாமியர்கள் பெரும்பான்மை உள்ள ஒரே மாநிலம் ஜம்மு காஷ்மீர் தான். எனவே பாரதிய ஜனதா கட்சி அதன் இந்துத்துவ பாசிச அரசியலுக்கான புனைவை உருவாக்க இந்த சிறப்பு அந்தஸ்தை நீக்க வேண்டும் என்ற முடக்கத்தான் தொடர்ச்சியாக அது முன் வைத்து வந்தது. இந்தியாவில் எங்கும் எவரும் நிலம் வாங்கலாம் ஆனால் காஷ்மீரில் வாங்க முடியுமா? என்று எதிர் வினா தொடுத்து வந்தது ஆனால் உண்மையில் காஷ்மீரில் காஷ்மீரை சாராதவர்கள் எவரும் நிலம் வாங்க முடியாது என்ற சட்டம் இவர்களால் பெருமைப் படுத்தப்படும் இந்து அரசர்களால் தான் கொண்டுவரப்பட்டது என்பதை அறிய வேண்டும்.

ஏனெனில் அங்கு ஓய்வுக்காக வரும் ஆங்கிலேயர்கள் அங்கேயே நிலம் வாங்கி நிலையாக தங்கி விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இந்த சட்டத்தை அப்போதைய இந்து அரசர் அங்கு கொண்டு வந்தார். ஆனால் அதனையே தனது இந்துத்துவ அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு வேறு விதத்தில் ஆர்எஸ்எஸும் பாஜகவும் பயன்படுத்தி வருகிறது

இதற்காக பல வடிகட்டிய பொய்களை எல்லாம் அவர்கள் திரும்பத் திரும்ப எப்போதும் பேசி வந்திருக்கின்றனர். அப்படியிட்ட ஒன்றுதான் சர்தார் வல்லபாய் பட்டேல் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான பிரிவு 370ஐ அவர் விரும்பவில்லை என்பதும் ஆகும். ஆனால் வரலாறு வேறு விதத்தில் இருக்கிறது இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த ஜூனாகத் சமஸ்தானம் மற்றும் நிஜாம் சமஸ்தானங்களை இந்திய யூனியனோடு சேர்த்து விட்டு காஷ்மீரை பாகிஸ்தானுக்கு கொடுத்து விடலாம் என்பதுதான் அவரது நிலைப்பாடாக இருந்தது என்பதும் உண்மை.

## சிறப்பு சட்டம் 370 குறித்து அண்ணல் அம்பேத்கார் கூறியது என்ன?

அரசியல் சாசன சிற்பி அண்ணல் அம்பேத்கரும் இப்பிரிவு 370 ஐ விரும்பவில்லை என்று இன்னொரு வாதத்தையும் அவர்கள் எப்போதும் முன் வைத்து வந்தனர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் 370வது பிரிவை எதிர்த்து ஷேக் அப்துலாவிடமே நேருக்கு நேரே பேசியதாக சில வார்த்தைகளை பிய்த்து முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அம்பேத்கர் கூறியதாக முன்வைக்கப்படும் இந்த வாதம் முதன்முதலில் காஷ்மீரின் பாரதிய ஜனசங்கத்தின் மாநில தலைவர் பால்ராஜ் மதோக் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் நம்பகத்தன்மை இப்போது கேள்விக்கு உள்ளாகிவிட்டது.

ஏனெனில் பொய்யே அவர்களது வாடிக்கை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மறைந்த 30 ஆண்டுகளுக்கு பிறகு அவர் கூறியதாக பால்ராஜ் மதோக் பதிவு செய்தார். அதன் உண்மைத் தன்மை அல்லது அந்த வாசகங்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பதை மதோக் குறிப்பிடவே இல்லை. மதோக் கூறியதை அப்படியே பலரும் இன்றுவரை மேற்கோள் காட்டி அம்பேத்கர் 370வது பிரிவை எதிர்த்தார் என திரும்ப திரும்ப கூறிவருகின்றனர்.

அம்பேத்கர் கூறியது என்ன?

ஒரு நாடாளுமன்ற விவாதத்தின் பொழுது அம்பேத்கர் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"இப்பொழுது காஷ்மீர் பிரச்சனைக்கு வருகிறேன்....... காஷ்மீருக்கு விதிவிலக்கு அளித்ததற்கு காரணம் என்னவெனில் காஷ்மீர் ஒரு உறுதியற்ற சூழலில் இந்தியாவுடன் இணைந்துள்ளது. பகுதி 1 மட்டும்தான் காஷ்மீருக்கு பொருந்தும். மற்ற பகுதிகள் காஷ்மீருக்கு பொருந்த வேண்டும் எனில் காஷ்மீர் அரசாங்கத்தின் கலந்தாலோசனையுடன் ஜனாதிபதி செயல்படலாம்."

(அம்பேத்கர் எழுத்துக்களும் உரைகளும் தொகுதி 15/பக்.129)

காஷ்மீரின் விசேட சூழல் குறித்து அம்பேத்கர் மிக தெளிவாக உணர்ந்திருந்தார் என்பதையே அவரது உரை வெளிப்படுத்துகிறது.

1951ம் ஆண்டு வெளியிடப்பட்ட "பட்டியலின மக்கள் சம்மேளனத்தின் தேர்தல் அறிக்கையில்" கீழ்கண்டவாறு அம்பேத்கர் குறிப்பிடுகிறார்:

" காஷ்மீர் இரண்டாக பிரிக்கப்பட வேண்டும். காஷ்மீர் பள்ளத்தாக்கு (அப்பகுதி மக்கள் விருப்பத்திற்கு உட்பட்டு) பாகிஸ்தானில் இணையலாம். முஸ்லிம் அல்லாத பகுதிகளான ஜம்முவும் லடாக்கும் இந்தியாவில் இருக்க வேண்டும்".

அதே ஆண்டு அக்டோபர் மாதம் ஜலந்தரில் ஒரு பத்திரிக்கையாளர் கூட்டத்தில் ஒரு கேள்விக்கு பதிலாக கீழ்கண்டவாறு கூறுகிறார்:

"இப்பொழுது ஜம்முகாஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தினால் அது இந்தியாவுக்கு எதிராக அமையும் என அஞ்சுகிறேன். ஜம்மு மற்றும் லடாக் பகுதிகள் பாகிஸ்தானில் இணையாமல் இருக்க வேண்டும் எனில் ஜம்மு, லடாக் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் தனித்தனியாக பொது வாக்கெடுப்பு (Zonal Plebiscite) நடத்த வேண்டும்" என்று

மற்றொரு கட்டுரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்:


"காஷ்மீர் முஸ்லிம்கள் பிரச்சனையில் நமக்கு என்ன சம்பந்தம் உள்ளது? அது காஷ்மீர் மக்களுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள பிரச்சனை. தேவை எனில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் மட்டும் பொது வாக்கெடுப்பு நடக்கட்டும்; அதன் முடிவுப்படி காஷ்மீரின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படட்டும்."

இந்த கட்டுரையிலும் ஜம்மு மற்றும் லடாக் பகுதிகள் இந்தியாவுடன் இருக்க வேண்டும் என அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

காஷ்மீர் குறித்த பல உரைகள் மற்றும் கட்டுரைகளில் எங்குமே அம்பேத்கர் 370வது பிரிவை எதிர்க்கவில்லை. மாறாக காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கேற்ப அந்த பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் ஜம்மு மற்றும் லடாக் பகுதிகள் இந்தியாவுடன் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். எனவே

அம்பேத்கர் 370வது பிரிவை எதிர்த்தார் என்பது சங்பரிவாரத்தின் திட்டமிட்ட கட்டுக்கதை!

# சியல் சாசனம் வழங்கிய உரிமைகளுக்கு எதிரானது!




சியாம் பிரசாத் முகர்ஜியின் ஆன்மா அமைதி கொள்ளுமாம்!

இத்தீர்ப்பை வரவேற்றுள்ள பாஜகவும் ஆர் எஸ் எஸ்சும் இந்து மகாசபையின் தலைவர் ஷியாம் பிரசாத் முகர்ஜியின் ஆன்மாஇப்போது இளைப்பாறும் என்று கூறியுள்ளது. இது பிரிக்கப்படாத பிரிட்டிஷ் இந்தியாவில் வங்காள மாகாண மத்திய சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற அவர் முஸ்லிம் லீக் அமைத்த அதன் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர் ஷ்யாம் பிரசாத் முகர்ஜி. அந்த அமைச்சரவை தான் பாகிஸ்தான் தனி நாடு கேட்ட தீர்மானத்தை நிறைவேற்றியது. இன்று எதிரி நாடாக சங்கப் பரிவார அமைப்புகளால் கொண்டாடப்படும் பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவளித்தவர்தான் இவர் என்றால் காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து 370ஐ நீக்கியது அவருக்கு செய்யப்படும் நன்றி கடனாக அவர்கள் அறிவிப்பதே கேளிக்குரிய ஒன்று என்பதைத் தவிர வேறு என்ன?

ஜம்மு காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்க மத்திய அரசுக்கு உரிமை உள்ளது. மாநிலம் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை ரத்து செய்யக் கோர முடியாது. இதில் தலையிடுவது, குழப்பத்தையும் நிச்சயமற்ற நிலையையுமே ஏற்படுத்தும். மேலும், நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அந்த வகையில், லடாக்கை யூனியன் பிரதேசமாக அறிவித்தது செல்லும். அடுத்த ஆண்டு செப்டம்பர் 30ம் தேதிக்குள் இந்திய தேர்தல் ஆணையம் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடத்த வேண்டும். ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு தொடர்பான மத்திய அரசின் அறிக்கையின்படி, விரைவில் ஜம்மு காஷ்மீருக்கு மத்திய அரசு மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது

இந்தியாவின் உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் மெச்சத் தகுந்த தீர்ப்புகளை வழங்கியிருந்தாலும் பாபர் மசூதி உடைப்பு வழக்கில் ஆவணங்களை பரிசீலிக்காது நம்பிக்கையின் அடிப்படையில் தீர்ப்பு சொன்னது பாபர் மசூதியை உடைத்தவர்கள் குற்றவாளிகள் என்று அறிவித்தும் அந்த குற்ற நடவடிக்கைக்காக எந்த தண்டனையும் அவருக்கும் அளிக்கவில்லை.

உயர் சாதி ஏழைகளுக்கான 10% பொருளாதார இட ஒதுக்கீடு செல்லும் என்று அளித்த தீர்ப்புரையின் போது ஏற்கனவே நமது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்குத்தான் இட ஒதுக்கீடு என்ற சட்ட வரையறைகளை மீறி பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளித்ததில்மிகப்பெரிய தவறு இழைத்திருக்கிறது அந்த வகையில் தான் காஷ்மீர்கான சட்டப்பிரிவு 370 நீக்கியதையும் சரி என்று கூறி தீர்ப்பளித்து இருப்பது இந்திய ஜனநாயகத்திற்கும் கூட்டாட்சி நடைமுறைக்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்.

சட்ட பிரிவு 371 இதே போன்ற சிறப்பு அந்தஸ்தை குறிக்கக் கூடியது தான். இன்று அசாம் மணிப்பூர் மிசோரம் நாகலாந்து அருணாச்சலபிரதேசம் குஜராத் தெலுங்கானாவில் சில பகுதிகள் உட்பட பல இடங்களில் அப்பகுதிகளின் சுற்றுச்சூழல் மற்றும் பண்பாட்டு சிறப்புகளை பாதுகாத்திடும் விதத்தில் நீடித்து வரும் நேரத்தில் பிரிவு 370 மட்டும் நீக்கியது எப்படி நியாயம்? இனி மாநிலங்களின் உரிமைகளை ஒன்றிய அரசு பந்தாட இத்தீர்ப்பு வழி வகுக்காதா?

### மறுக்கப்பட்ட இயற்கை நீதி!

குடியரசுத் தலைவரின் ஆணையின்படி காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்கியது செல்லும் என்றால் ஜம்மு காஷ்மீர் மக்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என்கிற இயற்கை நீதி என்னவானது? ஒரு மாநிலத்தின் பெயரையோ எல்லைகளையும் மறுவரைவு செய்ய அந்த மாநிலத்தின் சட்டமன்ற ஒப்புதல் அவசியம் என்பதும் இந்த தீர்ப்பில் கண்டு கொள்ளாமல் விடப்பட்டிருப்பதும் இயற்கை நியதிக்கு எதிரானதாகும். சம்பந்தப்பட்ட மாநிலத்தின் கருத்தைக் கேட்காமலே ஒரு தீர்ப்பை அளித்திருப்பது இந்திய மக்கள் தமக்குத் தாமே வழங்கிக் கொண்ட இந்திய இறையாண்மையை கேள்விக்குள்ளாக்குவது தான் என்பதை தவிர வேறு என்ன?

இத்தீர்புரையின்படி ஜம்மு காஷ்மீர் என்று இந்திய யூனியனோடு இணைந்ததோ அன்றே அதன் இறையாண்மையையும் மொத்தமாக ஒப்படைத்து விட்டது. போர்க்கால சூழலில் காரணமாகத்தான் இந்த சிறப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இன்றும் அரசியல் நிர்ணய சபை ஒப்புதல் இல்லாமல் இதில் குடியரசுத் தலைவர் முடிவு எடுக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறியுள்ளது.

நமது கேள்வி என்னவெனில் இறையாண்மை என்பது இங்கு நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் அல்லது வேறு எவருக்குமோ அளிக்கப்படவில்லை இறையாண்மை என்பது மக்களுக்குத்தான் என்பதை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலேயே நாம் காண முடியும் அப்படி எனில் அதை மீற குடியரசு தலைவருக்கு எப்படி அதிகாரம் வந்தது?

போர்க்கால சூழலின் அடிப்படையில் தான் இந்த பிரிவு உருவாக்கப்பட்டதாக உச்சநீதிமன்றம் கருதுவது ஏற்புடையதல்ல. ஏனெனில் சுதந்திர சமஸ்தானமாக அன்று இருந்த ஜம்மு காஷ்மீர் அதன் மன்னர் அரசு இந்தியாவோடும் பாகிஸ்தானோடும் இணையாமல் தனித்து இயங்கத்தான் விரும்பினார். பிறகு ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக அவர் இந்தியாவோடு இணைவதற்கு சம்மதம் தெரிவித்தனர். கடந்த 1947 அக்டோபர் 27 அன்று இந்திய அரசோடு மகாராஜா ஹரி சிங் கையெழுத்திட்ட பிறகு தான் நமது படை அங்கு சென்று காஷ்மீரை காத்தது என்பதுதான் வரலாறு. இந்த உடன்படிக்கையின்படி இம்மாநிலம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு திருத்தத்திற்கும்அந்த மாநில மக்களின் ஒப்புதல் அவசியம் என்பதை அது வலியுறுத்துகிறது. அதை மீறுவது அந்த ஒப்பந்தத்தையே மீறுவதாகாதா? என்பது தான் நமது கேள்வி

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 3 இந்திய வரலாற்றிலேயே இப்போதுதான் முதன்முறையாக மீறப்பட்டு ஒரு மாநிலத்தை அதன் தகுதியிலிருந்து கீழிரக்க வைத்திருக்கிறது . அரசு வழக்கறிஞர் கொடுத்த ஜம்மு காஷ்மீர் மீண்டும் மாநில அந்தஸ்து பெறும் என்ற உறுதியின் அடிப்படையில் இவையெல்லாம் உச்ச நீதிமன்றத்தால் நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்றால் நீதிபரிபாலத்தில் மிக உயர்ந்த இடமான உச்ச நீதிமன்றம் சட்ட வரையறைகளை பின்பற்றாது சென்று விட்டதோ என்ற ஐயம் ஒவ்வொரு சாமானியனுக்கும் எழும் வாய்ப்பு உள்ளது. குடியரசுத் தலைவரின் சட்டம் மாநில நலன்களுக்கு பெரும் ஊறுவிளைவித்துவிட்டது. அத்தோடு ஜனநாயக நிறுவனங்களுக்கான அதிகார எல்லைக்கோடுகளையும் இந்திய இறையாண்மை என்பதன் பெயரால் கிழித்தெறிந்துவிட்டது என்பதுடன் நாட்டின் கூட்டாட்சி தத்துவத்தை ஜனநாயக செயல்முறைகளையும் சேர்த்தே அழித்திருக்கிறது இத் தீர்ப்பு என்பதே உண்மை!

அதிகார பரவலுக்கும் ஒரு மெய்யான கூட்டாட்சி முறைக்கும் வலுவான குரல்கள் எழுந்து வரும் இந்த வேளையில் அரசியல் சாசன உறவு அடிப்படையில், இந்திய யூனியனோடு ஜம்மு காஷ்மீர் வகித்துவரும் சிறப்புரிமை என்பது 1952ல் நடத்த டெல்லி ஒப்பந்தத்திலும் உறுதி செய்யப்பட்டது. அதை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அதேபோல ஜம்மு காஷ்மீரின் அரசியல் அவையிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு 1954ம் ஆண்டு அது ஆணையாக்கப்பட்டது. இந்திய அரசியல் சாசனத்தின் 3வது பிரிவின்படி ஒரு கூடுதல் பிரிவு உருவாக்கப்பட்டு, எந்த ஒரு சட்ட முன்வடிவும், ஜம்மு காஷ்மீர் பகுதி எல்லையை அதிகப்படுத்தவோ, குறைக்கவோ அல்லது அதை மாற்றவோ, எல்லைகளை மறுவரையறை செய்யவோ இந்திய நாடாளுமன்றத்தில் சட்ட முன்வடிவு வந்தால், அது கட்டாயம் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தின் ஒப்புதலோடு தான் இருக்க வேண்டும் என்பதை சேர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதே போல 1973ல் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற கேசவானந்தா பாரதி வழக்கில் கூட்டாட்சி தத்துவம் என்பது நம்முடைய அரசியல் சாசனத்தின் அசைக்க முடியாத அடிப்படையான ஒன்று என்றும், நாடாளுமன்றம் ஒருபோதும் சட்டமன்ற பணிகளை ஆற்றக் கூடாது என்றும் கூறிய அனைத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் தற்போது உச்சநீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட இத்தீர்ப்பு நிச்சயம் எதிர்காலத்தில் மீண்டும் திருத்தப்படும்!அதிகாரப் பரவலாக்கம்தான் அடுத்த கட்ட ஜனநாயக வளர்ச்சி என்றால் அதிகாரம் ஓரிடத்தில் குவிப்பது சர்வாதிகாரம் அன்றி வேறு என்ன?

உச்சநீதிமன்ற தீர்ப்பு ஜனநாயக கூட்டாட்சி முறையை வளர்க்கவா? சர்வாதிகாரத்தை வளர்க்கவா?

தொடர்புக்கு: 9444481703

## தமிழ்நாடு அரசின் பொறுப்பான செயல்பாட்டினால் சென்னையில் பெரும் பாதிப்பு தவிர்ப்பு

### வெள்ளப் பாதிப்பை நேரில் ஆய்வு செய்த மத்தியக்குழு பாராட்டு



*தமிழ்நாடு அரசின் பொறுப்பான செயல்பாட்டினால், சென்னையில் 'மிக்ஜம்' புயல் வெள்ளப் பாதிப்பு பெருமளவு தவிர்க்கப்பட்டு இருப்பதாக ஒன்றிய அரசின் ஆய்வுக்குழு பாராட்டியுள்ளது.*

*'மிக்ஜம்' புயல் காரணமாக சென் னையில் டிசம்பர் 4, 5 தேதிகளில் பெருமழை கொட்டித் தீர்த்தது. கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 53 செ.மீ. அளவிற்கு பெய்த வரலாறு காணாத மழையால் சென்னை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்த ளித்தன. 17 பேர் வரை உயிரிழந்த னர். ஆயிரக்கணக்கான வீடுகளுக் குள் வெள்ளம் புகுந்தது. வீட்டு உபயோகப் பொருட்கள், வாகனங் கள், தொழில் நிறுவனங்களில் இருந்த இயந்திரங்கள் சேதம் அடைந்தன.*

*முதல்வர் துவங்கி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளா ட்சி பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அதிகாரிகள், மீட்புப் பணிக்காக வெளிமாவட்டங்களிலிருந்து வர வழைக்கப்பட்ட ஊழியர்கள் என தீவிரமாக களத்தில் இறங்கிய தமிழ்நாடு அரசு மீட்புப் பணிகளை வேகமாக முன்னெடுத்தது.*

*இதனிடையே சென்னை மழை வெள்ளப் பாதிப்புக்களை ஆய்வு செய்வதற்காக, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோ சகர் குணால் சத்யார்த்தி தலைமை யில் 6 பேர் கொண்ட மத்தியக் குழு வினர் தில்லியில் இருந்து திங்கட்கிழ மை (டிச.11) இரவு விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர். இந்த குழு செவ்வாய்க்கிழமை (டிச.12) சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனாவை சந்தித்தது. அப்போது புயல் பாதிப்புகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தியது. பின்னர் இரண்டாகப் பிரிந்து, வடசென்னை, தென்சென்னை பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டது.*

*இந்தஆய்வுக்குஇடையே,மத்தியக்குழுவினர் செய்தியாளர் களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது, "சென்னை மிக மோசமான முறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வெள்ளத் தின்போது அவர்கள் முடிந்த அள விற்கு மிகச் சிறப்பாக பணியாற்றி பெரும்பாதிப்பில் இருந்து சென்னை யை காப்பாற்றி உள்ளனர். அதற்காக தமிழ்நாடு அரசினை பாராட்டு கிறோம்" என்று தெரி வித்தனர்.*

*மேலும்,"தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை யால் சென்னையில் பாதிப்பு என்பது மிகக் குறைவாக நடைபெற்றுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்திருந் தால் பெரும் பாதிப்பினை தமிழ்நாடு எதிர்கொண்டிருக்கும். மழைநீர் வடிகால் கட்டமைப்பு என்பது கடந்த 2015 வெள்ளத்தின்போது இருந்ததை விடவும் மிகச் சிறப்பாக உள்ளது. அதனால்தான் சென்னை விமான நிலையம் மிக விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.*

*மின்சாரம் கூடுமானவரை விரைவில் வழங்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்புச் சேவை விரைவாகவே சீர் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு அரசினை மத்திய ஆய்வுக் குழு சார்பாக பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் தமிழ்நாடு அரசுக்கு உரிய நிவாரணம் கிடைக்க நாங்கள் உறு துணையாக இருப்போம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.*

காடுகளுக்கான பகுதிகளில்

# சுரங்கத் தொழிலை அனுமதிக்க விதிகளை வளைக்கும் ஒன்றிய அரசு

## பினாய் விஸ்வம் எம்பி குற்றச்சாட்டு!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்தேசியக்குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி டிசம்பர் 4ல் வெளியிட்ட அறிக்கையில் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் கருத்தைப் புறக்கணித்துக் காடுகளுக்கான பகுதிகளில் சுரங்கத் தொழிலை அனுமதிப்பதற்காக சட்டவிதிகளை அரசு வளைக்கிறது எனக் குற்றம் சாட்டினார்.

அவர் எழுப்பிய நாடாளுமன்றக் கேள்வி ஒன்றிற்கு அளிக்கப்பட்ட பதிலில் இருந்து, மத்திய பிரதேசம் மற்றும் சத்தீஷ்கரில் மிக அடர்த்தியான காடுகள் நிறைந்த பகுதிகளில், நிலக்கரி சுரங்கங்களுக்காக ஏலம் விடுவதை அனுமதிப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்த சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் மத்திய சுரங்கத் திட்டமிடல் மற்றும் டிசைன் ஆய்வு நிறுவனம் முன்வைத்த கவலைகளை மத்திய நிலக்கரி அமைச்சகம் புறக்கணித்ததை அந்த பதில் அம்பலப்படுத்தியது.

2018 ஆகஸ்டில் சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சரகம் (MoEF&CC) நிலகரி நிறைந்த 15 பிளாக்குகள் பகுதி, வனப்பகுதிகளாகப் பாதுகாக்கப்பட வேண்டிய பிராந்தியத்தில் வருகிறது எனத் தெரிவித்ததாக நிலக்கரி அமைச்சர் பிரகலாத் ஜோஷி எழுத்துபூர்வமான ஒரு பதிலில் கூறினார். மத்திய சுரங்கத் திட்டமிடல் மற்றும் டிசைன் ஆய்வுநிறுவனத்துடன்பேசியபிறகு அந்தப் பகுதியின் எளிதில் பாதிக்கப்படக்கூடிய தன்மை காரணமாக சுரங்கம் வெட்டுவது சாத்தியமல்ல என்றும், "அந்த பிளாக்குகளிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து எடுப்பதும் சாத்தியமல்ல என்று முடிவு எடுக்கப்பட்டது; எனவே இந்த 15 தொகுதி பகுதிகள் சுரங்கத்திற்காக ஒதுக்கீடு செய்வதைப் பரிசீலிக்க முடியாது" என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், 2022ல் முடிவு அப்படியே தலைகிழாக மாறி, பல்லுயிர்பெருக்க இழப்புக்குறித்தஉந்நியாயங்களும் விளக்கப்படாமலும், சுற்றுச் சூழல் அமைச்சகம் மற்றும் நிலக்கரி அமைச்சகத்தின் சொந்தமான நிபுணத்துவம் உடைய அறிவியல் ஆய்வு நிறுவனமான 'மத்திய சுரங்கத் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நிறுவனத்தின் (CMPDI) தயக்கங்களை மீறி சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதி வெளியிடப்பட்டது.

நிலகரிதொகுதிகள்வணிக ஏலத்திற்காக முன் வைக்கப்பட்டு, தீவிரமான ஆதரவு திரட்டல் பேரங்களுக்குப் பிறகு அதானி குழுமத்திடமிருந்து மட்டும் ஒற்றை ஏலம் கேட்பு பெறப்பட்டது. தொழில்நுட்பக் காரணங்களுக்காக அதானி குழுமத்திற்குச் சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ய முடியாது என்ற நிலையிலும், ஒதுக்கீட்டிற்கு எதிரான எல்லா கருத்துக்களையும் மீறி நாட்டின் காடுகள் பேரழிவுக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது; அதானி குழுமத்தின்பால் அரசுக்கு உள்ள காதலுக்கு எல்லை ஏதுமில்லை என்பதை இது காட்டுகிறது.

தேசத்தின் இயற்கைச் செல்வத்தைப் பாதுகாக்கும் அக்கறையோ அல்லது வனங்களைச் சார்ந்து வாழும் மக்களின் வாழ்வாதாரம் குறித்த அக்கறையோ அரசுக்கு இல்லை. சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் கருத்தை முழுமையாகப் புறக்கணித்து பல்லுயிர் பெருக்க இழப்பை இந்த அளவு ஏற்படுத்துவது, எந்த அளவு அரசு நிர்வாக முறைமையில் பேராசை நுழைந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. அதானிக்காக, அரசின் சொந்த நிபுணர்களின் கருத்தையே அலட்சியப்படுத்தியும் விதிகளைக் கடுமையாக மாற்றியும் நாட்டின் காடுகளின் செல்வ வளங்கள் அதானி சுரண்டுவதற்காகத் திறந்து விடுகிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மோடியின் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிகள் எதுவும் முழு செயல்பாட்டிற்கு வரவில்லை

## பினாய் விஸ்வம் எம்பி தாக்கு!

நாடு முழுவதும் புதிய அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்கள் (எய்ம்ஸ்) கட்டுவது குறித்த பிரதமர் நரேந்திர மோடியின் வானளாவிய கதைகளின் உள்ளிடற்ற தன்மையை அரசின் சொந்த புள்ளிவிபரங்கள் அம்பலப்படுத்துகிறது என்று கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எய்ம்ஸ் செயல்பாடு குறித்து அவர் எழுப்பிய கேள்விக்குச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கான ராஜாங்க அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் அளித்த எழுத்துபூர்வ பதிலை அவர் மேற்கோள் காட்டினார். நாடு முழுவதும் எய்ம்ஸ் நிறுவனங்களின் பாடப் பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கையைவிட பணியாற்றும் ஆசிரியர்கள்எண்ணிக்கைமிகக்குறைவாகவே உள்ளது. நாடு முழுவதுமுள்ள எய்ம்ஸ் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மருத்துவ இடங்களுக்கு மிக அதிகமாக மாணவர்கள் எண்ணிக்கை இருப்பதன் காரணமாக இந்தியாவில் மருத்துவக் கல்வி முறையின் மீது பெரும்சுமை ஏற்றப்பட்டுள்ளதை அரசு புள்ளிவிபரங்களும்கூட வெளிப்படுத்துகின்றன.

இவ்வளவு மாணவர்களுக்கு இவ்வளவு ஆசிரியர்கள் என்ற மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதம் மோசமாக இருப்பது, ஏழைகளுக்கான சுகாதாரச் சேவைகளைப் பாதிக்கிறது. சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி நாட்டின் எய்ம்ஸ் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கையை மூன்று மடங்கு ஆக்கியதாக உரிமை பாராட்டி பெருமை பேசினார்; ஆனால் அவற்றில் எதுவும் செயல்பாட்டிற்கு வரவில்லை என்பதுடன், சில அறிவிப்புகள் வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளன.

அனுமதிக்கப்பட்ட மொத்த அசிரியர்கள், ஊழியர்களில் 5,672 பேர்களில் சுமார் 38 சதவீதமான 2,134 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மறுபுறம், எய்ம்ஸ் கல்லூரிகளில் எம்பிபிஎஸ் படிப்புக்கான 2,169 இடங்களுக்கு மாறாக, அதனெதிர் சுமார் 5 மடங்கு கூடுதலாக மாணவர்கள் 9,941 பேர் எய்ம்ஸ் கல்லூரிகளில் எம்பி பிஎஸ் படித்து வருகிறார்கள்.

எய்ம்ஸ் கல்லூரிகளுக்கு ஒதுக்கீடு செய்த நிதியைப் பயன்படுத்துவது குறைவதும், மக்களுக்குச் சேவை செய்ய இந்நிறுவனங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதில் அமைச்சரகத்தின் அக்கறை பற்றாக்குறையைக் காட்டுகிறது. மேலும், நாடாளுமன்றத்தில் அளித்த தரவுகளின்படி, மோடி அனுமதித்த 15 எய்ம்ஸ் நிறுவனங்களில் 6 கல்லூரிகளில் உள்நோயாளிகள் பிரிவு இல்லை, 5 மருத்துவக் கல்லூரிகள் வெளிநோயாளிகள் பிரிவைப் பார்த்ததில்லை. எய்ம்ஸ் செயல்திட்டத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ1,264 கோடியில் இதுவரை ஒரு ரூபாய்கூட செலவழிக்கப்படவில்லை என்பதன் மூலம், எய்ம்ஸ் குறித்துத் தர்பங்காவில் மோடி பெருமை பேசியது மீண்டும் ஒரு முறை அம்பலப்பட்டு நிற்கிறது. 2018ல் அனுமதி அளிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் கல்லூரிக்கு இதுவரை வெறும் ரூ18.37 கோடிகளும் 2019ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதிலிருந்து (ஹரியானா ரேவாரி மாவட்டத்தின்) மனேதி எய்ம்ஸ் கல்லூரிக்கு ரூ11.03 கோடிகளும் மட்டும் செலவழிக்கப்பட்டுள்ளது.

"பிரதமர் தனது வானளாவிய உறுதிமொழிகளை எதார்த்தத்தில் உண்மையாக்க இதுவே சரியான வேளை. பொது சுகாதாரத்திற்காக இந்தியா செலவிடுவது ஜிடிபியில் வெறும் 2.1 சதவீதமாக மட்டுமே நீடிக்கிறது. பெரும் அழிவை ஏற்படுத்திய இதுவரை சந்திக்காத கோவிட் பெருந்தொற்று நெருக்கடிக்குப் பிறகும், நாட்டின் பொது சுகாதாரக் கட்டமைப்பின்பால் அரசின் அலட்சியமும், தனது சாதனைகளில் தற்பெருமை கொள்வதும் அதிர்ச்சி அளிப்பதாகும். எய்ம்ஸ் போன்ற மருத்துவ அறிவியல் நிறுவனங்கள், மக்களுக்கு குறைந்த செலவு உயர் சிறப்புச் சிகிச்சையை வழங்குவதற்கு முக்கியமானவை ஆகும்.

ஆனால் அரசு பொது சுகாதாரக் கட்டமைப்புகளின்தரத்தை மேம்படுத்துவதில் தீவிரமாக இல்லை" என்று பினாய் விஸ்வம் அந்தச் செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

# பெண் தொழிலாளியின் பங்களிப்பு பெருமிதம் கொள்கிறோம்

## டி.எம்.மூர்த்தி உரை

தூத்துக்குடி வடக்கு ராஜா தெருவில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு அடிதளமாக திகழ்வது, பஞ்சாலை பெண் தொழிலாளி வழங்கிய பத்து செண்ட் நிலமே என எண்ணி பெருமிதம் கொள்கின்றேன். என தூத்துக்குடியில் நடைபெற்ற கே.டி.கே. தங்கமணி இல்ல திறப்பு விழாவில், ஜனசக்தி ஆசிரியரும், கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினரும், ஏஐடியுசியின் தேசிய செயலாளருமான டி.எம்.மூர்த்தி உரையாற்றினார்.

அவரது உரையில், இடதுசாரி சிந்தனையுடைய தொழிலாளர்கள் அதிகமானோர் குடியிருந்த பகுதி தூத்துக்குடி கிருஷ்ணராஜபுரம், சாதி மத பேதமின்றி தொழிலாளி வர்க்க உணர்வோடு வாழ்ந்த பகுதி. பஞ்சாலை தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்த பகுதி.

இப்பகுதியிலிருந்து வந்த பஞ்சாலை பெண் தொழிலாளி வள்ளியம்மாள். பஞ்சாலை தொழிலாளி, சங்க உறுப்பினர், கட்சியின் அங்கத்தினர். சங்கம் மற்றும் கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்காக பத்து சென்ட் நிலத்தை 1963இல் நன்கொடை வழங்கினார். இன்றைய மதிப்பில் அச்சொத்தின் மதிப்பு கோடி ரூபாய் பெறும்.

புதிய கட்டிடம் உருவாக 'அந்நிலம்' அடித்தளமாக அமைந்துள்ளது. காலத்தில் செய்த உதவியாய் பெண் தொழிலாளி வழங்கிய நிலம் துணை புரிந்துள்ளது. அத்தகைய தியாக உள்ளம் படைத்த வள்ளியம்மாள் நினைவு நாளில் புதிய கட்டிடம் திறப்பது சால பொருத்தமானது.

புதிய கட்டிடத்திற்கு, தொழிலாளர்களின் போர்குணமிக்க தலைவர், கே.டி.கே. தங்கமணி இல்லம் என பெயரிடப்பட்டுள்ளது பெருத்தமான ஒன்று. கே.டி.கே. தங்கமணியின் இல்லத்தரசி பெயரும் வள்ளியம்மாள் என்பதனை நினைவு கூறுகிறேன்.



சிறப்பு மிக்க கட்டிட உருவாக்கத்திற்கு செயலாற்றிய முன்னணி ஊழியர்களை நினைவுபடுத்தியும், இந்திய வரலாற்றில், முதல் அரசியல் பொது வேலை நிறுத்த போராட்டமாக திகழ்ந்த 'கோரல் மில்' தொழிலாளர்களின் வேலை நிறுத்த போராட்டத்திற்கு வ.உ.சி மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரின் பங்களிப்புகளை எடுத்துக் கூறி, கே.டி.கே. தங்கமணி இல்லத்தினை திறந்து வைப்பதில் பெருமிதம் அடைவதாக கூறினார்.

கட்சி வழக்கறிஞர் பெ.கணபதி சுப்பிரமணியன்எழுதிய"ஹார்விமில்போரட்ட சுவடுகள்" எனும் நூலை ஏஐடியுசியின் பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் வெளியிட்டு, தூத்துக்குடி பஞ்சாலை தொழிலாளர்இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் மகத்தான பங்களிப்பு குறித்தும், இந்திய தொழிற்சங்க இயக்க வரலாற்றில் கம்யூனிஸ்டுகளின் செயலாற்றலையும் எடுத்துக்கூறினார்.

1925 டிசம்பர் 26 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது. அடுத்த ஒரு வார காலத்தில் ஏஐடியுசி மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதற்கு வாழ்த்து செய்தி அனுப்பிய கட்சியின் தலைவர் சிங்காரவேலர் "ஏஐடியுசி" முன்னெடுக்கும் தொழிலாளர் உரிமைப் போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் துணை நிற்கும்" என தெரிவித்திருந்ததை நினைவு கூர்ந்து பேசினார்.

கே.டி.கே.தங்கமணியின் படத்தினை ஏஐடியுசியின் மாநில தலைவர் எஸ்.காசிவிசுவநாதன் திறந்து வைத்து பேசினார். "தூத்துக்குடி பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தில் பதினைந்து ஆண்டுகளாக தலைவர் பொறுப்பிலிருந்து எஸ்.ஏ.முருகானந்தம் செயலாற்றினார். அப்பொழுது சங்க அலுவலகத்திற்காக 1974இல் கிரையம் வாங்கிய நிலத்தில் கே.டி.கே.தங்கமணி இல்ல கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளதையும், பஞ்சாலை தொழிலாளர் சங்க வளர்ச்சிக்கு அமரர் கே.பாலதண்டாயுதம், தியாகி பொன்னு, பயில்வான், அருணாசலம், பீர் இஸ்மாயில், கிருஷ்ண கோனார், ப.மாணிககம், உட்பட்டவர்களின் தியாகச் சுவடுகளையும், அவர்களின் வழித்தடத்தில் வந்த இளம் தொழிலாளர்களையும் நினைவுபடுத்தி பேசினார்.

கே.டி.கே.தங்கமணி இல்லம் மற்றும் வள்ளியம்மாள் அரங்கம் திறப்பு விழா நிகழ்விற்கு பஞ்சாலை தொழிலாளர் சங்க செயலாளர் சித்திரவேல் தலைமை தாங்கினார். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் ஞானசேகர் வரவேற்று பேசினார்.

கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர்அந்தோணி சௌந்திரராஜன் கட்சியின் செங்கொடியையும், பஞ்சாலை தொழிலாளர் சங்க மூத்த உறுப்பினர் ஆரோக்கியசாமி, ஏஐடியுசிகொடியினையும் ஏற்றினார்கள்.

வள்ளியம்மாள் அரங்கத்தை கட்சியின் தூத்துக்குடி மாவட்டக்குழு செயலாளர் ஏ.கருப்பன் திறந்து வைத்து வாழ்த்தி பேசினார்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் லோகநாதன், மாவட்ட தலைவர் கிருஷ்ணராஜ், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாலை தொழிலாளர் சங்க செயலாளர் முருகன், மதுரை பஞ்சாலை தொழிலாளர் சங்க செயலாளர் முருகன், பஞ்சாலை தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் பரமராஜ், ஜஎன்டியுசி பஞ்சாலை சங்க தலைவர் சுடலை, கட்சியின் மாவட்ட அலுவலக செயலாளர் எஸ்.மாடசாமி, தென்காசி மாவட்டக்குழு உறுப்பினர் சீனிவாசன் உள்பட பலர் வாழ்த்தி பேசினார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டக்குழு பொறுப்பு செயலாளரும், நெல்லை மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளருமான ஆர்.சடையப்பன் புதிய கட்டடத்திற்கு மின் விசிறி வழங்கி வாழ்த்துரையை நிறைவு செய்தார்.

ஏ.ஐ.டி.சியின் மாவட்டப் பொருளாளர் அ.பாலசிங்கம் நன்றி கூறினார்.

கட்சியின் மாவட்ட பொருளாளர் த.சுப்பிரமணியன் மற்றும் பெ.கணபதி சுப்பிரமணியன் ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார்கள்.

## கலை இலக்கிய அரங்கம்

### பாரதிவிழா

**சாத்தூர்:** மகாகவி பாரதியின் 142வது பிறந்த தினம், சாத்தூர் தனுஷ்கோடி அரங்கத்தில் பாரதி படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி கொண்டாடப்பட்டது.

இதில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் அறம் பாரதி படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். பாரதி நினைவாக பாரதி பாடல்கள் பாடப்பட்டன.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், கிளைச் செயலாளர் கணேசன், மாநிலக்குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன், ரயில் நிலைய அதிகாரி மைக்கேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாகை:** நாகையில் பாரதியார் பிறந்தநாள் விழா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நாகை கிளை சார்பில் நடைபெற்றது.

சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் நிஜாமுதீன், சிந்து நதியின் இசை... பாடலோடு தொடங்கிப் பேசினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற கவிஞர் நந்தலாலா பாரதிக்கும் கலை இலக்கியப் பெருமன்றத்துக்கானரத்த உறவு குறித்த பதிவு செய்தார்.

இப்படி நந்தலாலாவின் வார்த்தைகள் கூர்ந்து பார்க்க செய்தது.

**தர்மபுரி:** மகாகவி பாரதியின் பிறந்தநாள் விழா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் கே.சின்ன கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

பாரதியாரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மகாகவி பாரதி குறித்து அதன் மேனாள் பொதுச்செயலாளர் கவிஞர் ரவீந்திர பாரதி சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சேர்ந்த ஆர். நடராஜன், எஸ். ராமமூர்த்தி, கவிஞர் கவிமுகிலன், பா. முருகன், இரா. திருவேங்கடம், காசி தமிழ் குமரன், அன்னை தெரசா மகளிர் மன்றத்தைச் சேர்ந்த தீப்பொறி செல்வம், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஜெயராமன், ஜெயசீலன் மற்றும் பசுமை சீனிவாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.






**சேலம்:** இஸ்கப்/தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சேலம் மாவட்டக்குழு சார்பில் மகாகவி பாரதியார் பிறந்தநாள் நடைபெற்றது.

சேலம் மகாகவி பாரதியார் சிலைக்கு தோழர்கள் சுவாமிநாதன், சந்திரசேகரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில், அ.மோகன், ஏ.ராமன், பூமிபாலகன், டி.வி.கருணைதாஸ், எஸ்.எல். தங்கமணி, ஈ.ஆர்கே உள்ளிட்ட இஸ்கப் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் தோழர்கள் பங்கேற்றனர்.

**பட்டுக்கோட்டை:** தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பாக பாரதியாரின் பிறந்த தின விழா டாக்டர் கவிக்குயில் மு. செல்லப்பன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் ஆசிரியர் சி. ராமலிங்கம், பி.எஸ்.என்.எல். ஓய்வு பெற்ற அதிகாரி சிவ சிதம்பரம், தகவல் தொடர்பு முகநூல் ஆம்பல், டாக்கீஸ் தர்மராஜ், பட்டுக்கோட்டை துணைச்செயலாளர் சுகுமார், மதுக்கூர் பாரதிமோகன், காசாங்காடு துரைராஜ், பேராவூரணி முன்னாள் ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம், பட்டுக்கோட்டை நகரச் செயலாளர் விஜயன், நகர துணைச் செயலாளர்லெனின்,கட்சிஆபீஸ்உதவியாளர் மாரிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு பாரதியாரின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்கள். பாலதண்டாயுதம் நிறைவு செய்தார்கள்.

**திருத்துறைப்பூண்டி:** திருத்துறைப்பூண்டி கிளையின் சார்பில் பாரதி விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் ரெ.ஏகாம்பரம் தலைமை ஏற்க, அகில இந்தியன் வங்கி அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் பொறுப்பாளர் சி.பாஸ்கர், மன்றத்தின் மாவட்ட பொருளாளர் ப.அன்பழகன் மகாகவி பாரதியின் திரு உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

த.க.இ.பெருமன்றத்தின் செயலாளர் சி.இரோசேந்தின், மன்றத்தின் துணைத் தலைவர்தோழர்எஸ்.இராமச்சந்திரன்,கவிஞர் பொன்.இளையகுமார், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஜி.சரவணன், நகரச் செயலாளர் பி.வி.சி.கார்த்தி, வி.தொ.ச. எம்.முருகாணந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்தார்கள்.

### இலக்கியத் திருவிழா

விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கரிசல் இலக்கியத் திருவிழா 2023 விருதுநகர் மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் தேதிகளில் நடைபெற்றது.

தொடக்க விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப தலைமையேற்று தலைமையுரை வழங்கினார். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விழாப் பேருரை காணொளி வாயிலாக ஆற்றினார். மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் காணொலி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார்.

சாகித்ய அகாதெமி விருதாளர்கள் எழுத்தாளர் கு.அழகிரிசாமி, எழுத்தாளர் கி. ராஜநாராயணன் பெயர்களில் இரண்டு அரங்கங்கள் அமைத்திருந்தனர்.

எழுத்தாளர் பெருமாள் முருகன், எழுத்தாளர் சோ.தர்மன் சிறப்புரை வழங்கினர். எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் காணொளி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார். மருத்துவர் அறம் வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் எழுத்தாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

### நாளும் ஒரு கதை

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், நூற்றாண்டு கண்ட, சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைகளை நாள்தோறும் இணைய வழியில் கதை சொல்லும் நிகழ்வை டிசம்பர் 3 முதல் நடத்தி வருகிறது. முதல் நாள் நிகழ்வில் முதல் கதையைச் சொல்லி இந்த 100 நாள் நிகழ்வை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தொடங்கி வைத்தார். 'குமாரபுரம் ஸ்டேஷன்' மற்றும் 'அன்பளிப்பு' இரு கதைகளை கதை சொல்லி இந்த நிகழ்வை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

## ஜாதி சான்றிதழ் இல்லாமல் படிப்பை பாதியில் நிறுத்தும் இருளர் இன மக்கள்!

### அரசு உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தர்மதானபுரம் ஊராட்சிக்குட்பட்ட ஆத்துக்குடி மெயின் ரோட்டில் சுமார் 50க்கும் மேற்பட்டோர் சுமார் நான்கு தலைமுறைக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர், இவர்களின் மூதாதையர்கள் காட்டுப்பகுதியில், கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வாழ்ந்துள்ளனர், இவர்களுக்கு படிப்பறிவு இல்லை. தற்பொழுது இந்த இருளர் இன மக்கள் நகரத்தை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர். தங்களது பிள்ளைகளை படிக்க வைக்க அனைத்து வசதிகள் இருந்தும் ஜாதி சான்றிதழ் இல்லாமல் பள்ளி படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு குலத் தொழிலை நோக்கி செல்வதாக வேதனைப்படுகின்றனர்.

ஆதார் கார்டு, வாக்காளர் அட்டை, பான் கார்டு, வங்கி புத்தகம் என அனைத்தும் இருந்தும் தங்களுக்கு ஜாதி சான்றிதழ் மட்டும் கிடைக்கவே இல்லை இது தொடர்பாக பலமுறை தாலுகா அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என அனைத்து இடங்களுக்கும் சென்றோம் தங்களை அலைகழித்து விடுவதாக புகார் தெரிவிக்கின்றனர். உடனடியாக தமிழக அரசு தலையிட்டு தங்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

## பத்திரிக்கையாளர் சங்க மாநில மாநாடு

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்க (டியுஜே) மாநில மாநாடு நடைபெற்றது. மாநில தலைவர் டி.எஸ்.ஆர்.சுபாஷ் தலைமை வகித்தார். மாநாட்டில் இந்திய பத்திரிக்கையாளர் சங்க தலைவரும் பிரஸ் கவுன்சில் உறுப்பினரும், சிபிஐ தேசியக்குழு உறுப்பினருமான ஸ்ரீநிவாசரெட்டி, வேளாண்மைதுறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் காங்கிரஸ் திருச்சி வேல்சாமி, அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைசெல்வன் உள்பட பலர் கலந்து கொண்டார்கள். அதில் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரையா அவர்கள் படத்தை சிபிஐ த.இந்திரஜித் திறந்து வைத்தார். விருதுநகர் மாவட்ட ஜனசக்தி செய்தியாளர் எஸ்.பழனிக்குமார் உள்ளிட்ட செய்தியாளர்கள் தமிழகம் முழுவதுமிருந்து கலந்து கொண்டார்கள்.

## மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஏஐடியுசி அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என் கே ராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என். எஸ். பெருமாள் ஆர்ப்பாட்டத்தினை துவக்கி வைத்துப் பேசினார்.

கட்டுமான தொழிற்சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தர்மராஜன் மற்றும் லோகநாதன், மீனவர் சங்க செயலாளர் செந்தில்வேல், கைத்தறி சங்கத்தின் துணைச் செயலாளர் கே. ஆர். சுப்பிரமணியன், திருப்புல்லாணி ஒன்றியம் அப்துல் இஷாக், மலைச்சாமி, திருவாடானை தங்கராசு, முருகேசன், ராமநாதபுரம் களஞ்சியம் நாகராஜன், இளைஞர் மன்ற பொறுப்பாளர் சண்முகராஜன், பரமக்குடி ருக்குமாங்கதன் உள்ளிட்டோர்ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

## அம்பத்தூரில் வெள்ள நிவாரணம்

அம்பத்தூர் பகுதியில்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கட்சித் தோழர்கள் கட்டுமானம், ஆட்டோ மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா விஜயகுமார் அவர்களின் முன்முயற்சியால் 250 பேருக்கு விலை யில்லா அரிசி வழங்கப்பட்டது.

அம்பத்தூர் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு விஜயகுமார் தலைமை தாங்கினார். கட்சிதோழர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னைமாவட்ட செயலாளர் பா. கருணாநிதி மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் மாரியப்பன் கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா. துரைசாமி, துணைச் செயலாளர் லோகநாதன் பகுதி குழு உறுப்பினர்கள் ஏ. லோகேஷ் ரவிச்சந்திரன் பெருமாள் சிவா மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வ. சுஜாதா தலைமையில் துரைசாமி மாரியப்பன் ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று விலையில்லா அரிசி வழங்கப்பட்டது. அத்திப்பட்டு பகுதியில் பகுதி செயலாளர் இரா. விஜயகுமார் தலைமையில் தூய்மை மருத்துவ பணியாளர்களுக்கு விலை யில்லா அரிசி வழங்கப்பட்டது.

# சட்டமேதை அம்பேத்கர் நினைவு நாளில் வீரவணக்கம்



**விருதுநகர்:** இராஜபாளையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் திரு உருவ சிலைக்கு, மாவட்ட செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.லிங்கம் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு வி.ரவி, நகர செயலாளர் பி.கே.விஜயன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, வக்கீல் பகத்சிங், நகர துணை செயலாளர் வேழவன், மாவட்ட குழு மாயாண்டி உள்ளிட்ட முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் புரட்சியாளர் அம்பேத்கர் திருவுருவ படத்திற்கு மாலையணிவித்து மாரியாதை செலத்தும் நிகழ்ச்சி இராஜபாளையம் ஒன்றியம் முத்துசாமிபுரம், காமராஜ் நகர் ஒன்றிய கவுன்சிலர் வக்கீல் பகத்சிங் தலைமையில் நடைபெற்றது.

கட்சி மாவட்ட செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.லிங்கம் மாலையணிவித்து மரியாதையை செலுத்தினார். ஒன்றிய செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி, விதொச வரதராஜன், மாவட்ட குழு தோழர்கள் அய்யணன், மாயாண்,டி ஜெயராம் உள்ளிட்ட தோழர்களும் கலந்து கொண்டனர்.

# ஏஐடியூசி ஒருங்கிணைந்த தொழிலாளர்கள் அமைப்பு கூட்டம்

மதுரை தெற்கு பகுதி ஜெய்ஹிந்த்புரத்தில் ஏஐடியூசி ஒருங்கிணைந்த தொழிலாளர் அமைப்பு கூட்டம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு பகுதி செயலாளர் பா.சுமதி தலைமையில் நடைபெற்றது.

மதுரை மாவட்ட ஏஐடியூசி நிர்வாகிகள் எம்.நந்தாசிங், கே.சேது, எம். இருளாண்டி, விளாங்குடி மணி, இந்தியக்கம்யூ., கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள் எம்.எஸ்.முருகன், சி.தாமஸ், மாதர் சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, தபால் துறை ஊழியர்கள் சங்கத்தின் சேர்மபாண்டியன் உட்பட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக பா.சுமதி, செயலாளராக எம்.பாலமுருகன், பொருளாளராக பி.பாரதி, நிர்வாக குழு உறுப்பினர்களாக ஜி.பாலன், எஸ்.சேகர், பி.முனீஸ்வரி, எம்.முத்துலெட்சுமி மற்றும் எம்.கரிகாலன், ஏ.பாட்ஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# ஆ.இரா.வேங்கடாசலபதிக்கு பாரதி விருது

## மக்கள் சிந்தனைப் பேரவை வழங்கியது

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடைபெற்ற பாரதி விழாவில், மக்கள் சிந்தனைப் பேரவையின் 2023 ஆம் ஆண்டிற்கான ‘ பாரதி விருது ‘ சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருதினை தமிழறிஞர் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் வழங்கினார். உடன் பேராசிரியர் த. ராஜாராம் , வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தின் பேராளர் குழந்தைவேல் இராமசாமி, அக்னி ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் கே. தங்கவேலு, மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் உள்ளனர்.

## வினாடி - வினா விடைகள்

1. 15 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தையது.
2. நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிட்டி தியாகராயர்
3. ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு மட்டுமே (ஆனால் 5 பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்)
4. இந்திய மொழி பத்திரிகைகள் சட்டம் 1878 (Vernacular Press Act)
5. அதிபர் ரிச்சர்ட் நிக்சன் (1972)
6. 39 வயது

# திருநெல்வேலி இஎஸ்ஐ மருத்துவமனையை விரிவாக்கம் செய்க!

## சபாநாயகரிடம் நெல்லை மாவட்ட ஏஐடியூசி வேண்டுகோள்!



திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் உள்ள இ. எஸ். ஐ மருத்துவமனை தமிழ்நாடு ஏஐடியூசியின் முயற்சியினால் கொண்டுவரப்பட்டது. முப்பது படுக்கைகள் வசதியுடன் தொடங்கப்பட்ட இம் மருத்துவமனை தற்போது 100 படுக்கைகள் கொண்டதாக உயர்ந்துள்ளது.

நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களிலுள்ள 2.5 லட்சம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த பத்து லட்சம் உறுப்பினர்கள் தற்போது மருத்துவ வசதி பெற்று வருகிறார்கள். தினசரி ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளி நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். தமிழ்நாட்டில் தரம் உயர்ந்த மருத்துவமனைகளில் இதுவும் முன்னணியில் இருக்கிறது.

தற்போது இம்ம மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை ஏஐடியூசி முன் வைத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் சபாநாயகர் அப்பாவு அவர்களை மருத்துவமனையின் டாக்டர் சீனிவாசன் மற்றும் டாக்டர் மகேஷ் அவர்களுடன் தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், நெல்லை மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் ஆர். சடையப்பன், உதவித் தலைவர் ஆர். ரங்கன், ராதாபுரம் தாலுகா சிபிஐ செயலாளர் எஸ்.சேதுராமலிங்கம், சுகாதார தொழிலாளர் சங்க செயலாளர் எம். எஸ். மணியன் ஆகியோர் நேரில் சந்தித்து மருத்துவமனையின் விரிவாக்கம் குறித்து விரிவாக பேசினர்.

சபாநாயகர் நேரடியாக இஎஸ்ஐ மருத்துவமனைக்கு வருகை தந்தார். அவருடன் திருநெல்வேலி மாநகராட்சி மேயர் சரவணன், உதவி மேயர் ராஜு உட்பட பலரும் வருகை தந்தனர். சபாநாயகர் தமிழ்நாடு முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.

# மழையால் பாதிக்கப்பட்ட சிறு, குறு தொழில் முனைவோருக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்குக!

தமிழ்நாடு தொழில் துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜே.ஜேம்ஸ் மற்றும் எம்.ஜெயபால் தலைமையில் நடைபெற்றது.

மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பின் சார்பில் வருகின்ற 12.12.2023 அன்று மின் கட்டண உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி, எட்டாம் கட்டம் இயக்கமாக தமிழ்நாடு முழுவதும் மனித சங்க இயக்கம் நடத்த முடிவு செய்திருந்தோம். சென்னையில் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் கடுமையாக இருந்து வருவதால் எட்டாம் கட்ட இயக்கம் வருகின்ற 27.12.2023 ம் தேதிக்கு ஒத்திவைத்து உள்ளோம்.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில் சிறு குறு நடுத்தர நிறுவனங்களை உடனடியாக இணைக்க வேண்டும். அதன் அடிப்படையில் நிவாரணம் வழங்கிட மத்திய அரசு முன் வர வேண்டும். மாநில அரசு அவர்களுக்கு நிவாரணம் கிடைத்திட ஆவண செய்திட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தொழில் பேட்டைகளில் உடனடியாக தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் வங்கி மற்றும் இன்சூரன்ஸ் நிறுவன அதிகாரிகள் உள்ளடங்கிய குழு அமைத்து, முகாம் நடத்தி, இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ள தொழில் முனைவோர்கள் பாதிப்புகளையும் மதிப்பு செய்து உரிய நிவாரணம் வழங்கிடவும், இன்சூரன்ஸ் இல்லாத குறுந்தொழில் நடத்தியவர்களுக்கு பாதிப்புகளை கண்டறிந்து நஷ்ட ஈடு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள தொழில் பகுதிகளை கண்டறிந்து, அவர்களுக்கு மின் கட்டணம் செலுத்த குறைந்தபட்சம் 2 மாதங்களாவது அவகாசம் கொடுக்க வேண்டும்.

மழை வெள்ளத்தால் பாதித்த மாவட்டங்களுக்கு தொழில் கடன், வீட்டுக் கடன், வாகன கடன் அனைத்தும் திரும்ப செலுத்த குறைந்தபட்சம் ஆறு மாத காலம் அவகாசம் வழங்கிட மத்திய அரசு வங்கிகளுக்கும், ரிசர்வ் வங்கிக்கும் வழிகாட்ட வேண்டுகிறோம். ஆறு மாதங்களுக்கான வட்டி, அபராத வட்டிகள் அனைத்தும் தள்ளுபடி செய்திட வேண்டும் என சங்கத்தின் சார்பில் மோ.ஜேம்ஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# குடிநீர், கழிப்பிட வசதி கேட்டு சிபிஐ ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்டம் சாத்தூர் நகராட்சியில் மேலகாந்தி பகுதியில் குடி தண்ணீர் பத்து நாட்களுக்கு ஒருமுறை வருகிறது. அதுவும் கலங்கலாக உள்ளது. அப்பகுதியில் 8மாதமாக பொதுக் கழிப்பிடம் பூட்டப்பட்டுள்ளது. இதனை சரிசெய்து திறக்க வேண்டும். நகராட்சியில் சுகாதார அலுவலர் மற்றும பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. பலமுறை மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மேற்கண்ட கோரிக்கைளை உடனே நிறைவேற்றக்கோரி சாத்தூர் நகராட்சி அலவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்ட செயலாளர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். கோரிக்கை களை விளக்கி மாவட்ட போருலாளர் எஸ் .பழனிக்குமார் பேசினார். நகராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

# அவிநாசி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த சிபிஐ அவிநாசி ஒன்றிய மாநாடு வலியுறுத்தல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஒன்றிய 20 ஆவது மாநாடு தோழர் முருகேசன் சரஸ்வதி அம்மாள் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டை பி.அர்ஜுன், கருப்புசாமி, அ.பேபி ஆகியோர் தலைமை தாங்கி நடத்தினர். மாநாட்டு கொடியை கட்சியின் மூத்த தோழர் ஆறுமுகம் ஏற்றி வைத்தார்.

மாநாட்டை துவக்கி வைத்து மாவட்டத் துணைச் செயலாளர் எம்.மோகன் அவர்கள் அரசியல் உரையாற்றினார்.

மாநாட்டில் ஒன்றிய செயலாளராக இரா. முத்துச்சாமி, துணைச் செயலாளராக வி.கோபால், பொருளாளராக ஏ.ஜி.சண்முகம் ஆகியோரை உள்ளடக்கிய 21பேர் கொண்ட ஒன்றிய குழு தேர்வு செய்யப்பட்டது.

அவிநாசி அரசு மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்க வேண்டும், அவிநாசியில் உள்ள நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டும், செம்பியநல்லூர், பழங்கரை, வேலாயுதம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை அவிநாசியுடன் இணைத்து அவிநாசி பேருராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தமிழ்நாடு ஏஐடியுசி உடல் உழைப்பு தொழிலாளர் சம்மேளனம் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்




நலவாரியத்தில் பதிவு செய்யும் வழிமுறைகளை எளிமையாக்கு;தற்போது வழங்கிவரும் ஓய்வூதியத்தை மாதம் ரூ.3000 ஆக உயர்த்தி வழங்கு; கல்வி, திருமண உதவித்தொகையை உயர்த்தி வழங்கு! மாதாமாதம் 10 ஆம் தேதிக்குள் பென்சன் கிடைப்பதை உறுதி செய்.

விபத்து மரண உதவி தொகையினை ரூ.5 லட்சமாக உயர்த்திக்கொடு; தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் பணப்பலன்களை விரைந்து வழங்கிடு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஏஐடியுசி உடல் உழைப்பு தொழிலாளர் சம்மேளனம் சார்பாக மாநிலம் தழுவிய முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கோவை:** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள மத்திய தந்தி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு ஏஐடியுசியின் மாநிலத் துணைத் தலைவர் சி.தங்கவேல் தலைமை தாங்கினார். இதில், ஏஐடியுசி நிர்வாகிகள் கே.எம். செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், பெ.மௌனசாமி, பி.சுப்பிரமணியம், ஜி.பி.சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்துநிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சை மாவட்ட உடல் உழைப்பு தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தி.கோவிந்தராஜன் தலைமை வகித்தார். உடல் உழைப்பு தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆர்.தில்லைவனம் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஏ ஐ டி யூ சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் முடித்து வைத்து உரையாற்றினார். நிகழ்வில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட செயலாளர் துரை.மதிவாணன், சுமை சங்க மாநில தலைவர் அ.சாமிக்கண்ணு, கைத்தறி சம்மேளன மாநில தலைவர் கோ. மணிமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்ட ஏ ஐ டி யு சி உடலுழைப்பு தொழிலாளர் சங்கம் சார்பில், காஞ் சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டது. ஏ ஐ டி யு சி காஞ்சிபுரம் மாவட்ட பொதுச் செயலாளர் ஆ. மூர்த்தி, துணைச் செயலாளர் எல். தங்கராஜ், ஏ ஐ டி யு சி கட்டிடத் தொழிலாளர் சங்கம் மாவட்டச் செயலாளர் எஸ். கருணா, அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் பொறுப்பாளர் வி. திருமுருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு , ஆர்ப்பாட்டம் நடந்தது . ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் சமுத்திரம் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிபிஐ பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ , மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார் , மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் பேசினார்கள். ஒன்றிய செயலாளர்கள் சக்கணன், முனியசாமி, சுவாமிநாதன், ஜீவா, கணேசமூர்த்தி, தவிதொச வரதராஜன் உள்பட 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

**கரூர்:** மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மாவட்ட பொதுச் செயலாளர் ஜிபிஎஸ். வடிவேலன் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

ஏ ஐ டி யு சி உடல்உழைப்பு தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பி.சக்திவேல், ஏ ஐ டி யு சி மாவட்ட துணை செயலாளர் கே.கலாராணி, பரமத்தி ஆர்.குப்புசாமி, ஏ ஐ டி யு சி மாவட்ட பொருளாளர்பி. ஞானவேல், ஏ ஐ ஒய் எப் மாவட்ட செயலாளர், எம்.லட்சுமி காந்தன், ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் கே.குப்புசாமி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

**திருச்சி:** மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு ஏ.ஐ.டி.யு.சி உடலுழைப்பு தொழிலாளர்கள் சம்மேளனம் சார்பில் நலவாரிய பதிவுகளை, எளிமைப்படுத்த, நல வாரியத்தில் பதிவு செய்த, தொழிலாளர்கள் அனைவருக்கும், பொங்கல் போனஸாக 5000 ரூபாய் வழங்கிட, விபத்து மரண உதவி தொகை 5 லட்சம் வழங்கிட, நல வாரியத்தில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய, நல வாரியத்தில் பதிவு செய்த அனைத்து பணியாளர்களுக்கும் ஓய்வூதியத்தை மூவாயிரம்மகா வழங்கிட தமிழக அரசை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ்வார்ப்பாட்டத்திற்கு ஏ.ஐ.டி.யு.சி உடலுழைப்பு தொழிலாளர்கள் சம்மேளனம் மணப்பாறை தாலுகா தலைவர் பழனிச்சாமி தலைமை வகித்தார். செயலாளர் நல்லுச்சாமி முன்னிலை வகித்தார். ஆட்டோ சம்மேளன மாவட்ட தலைவர் இந்திரஜித், மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், உள்ளாட்சி பணியளர்கள் சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஜனசக்தி உசேன், விவசாய சங்க மாவட்ட துணைச் செயலாளர் ராஜேந்திரன், விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட குழு உறுப்பினர் பெருமாள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் சௌக்கத்அலி ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி உரை நிகழ்தினர்கள்.

# மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா!



மதுரையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மகாகவி பாரதியார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஆசிரியராக பணி செய்த சேதுபதி மேல்நிலை பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை தெற்கு பகுதி குழு செயலாளர் பா.சுமதி மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் பா.ராஜலெட்சுமி, மதுரை மாநகர மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ், மற்றும் மேற்கு பகுதி செயலாளர் ஜனசக்தி என். ஜீவா, மற்றும் ஏஐடியூசி ஒருங்கிணைந்த தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் எம் .பாலமுருகன் உட்பட தோழர்கள் மகாகவி பாரதியார் சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பாக மகாகவி பாரதியார் 141 வது பிறந்தநாள் நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட குழு உறுப்பினர் ரஞ் சித் தலைமை வகித்தார்.

ஆசிரியர் தங்கவேல், பேராசிரியர் சதீஷ் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் சுரேஷ், வட்ட தலைவர் வீரசேனன், மாவட்டத் தலைவர் தங்க.சேகர் ஆகியோர் பாரதியாரின் புகழ் குறித்து சிறப்புரையாற்றினர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

◆ இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மேற்கு அம்மையப்பபுரம் கிளை நிர்வாக குழு வி.பாலகிருஷ்ணன் அவர்களின் மகன் பி.வைரமுத்து பி.ஏ. ஏ.வளர்மதி Dip. (Nursing) திருமண விழா நடைபெற்றது. மணமக்கள் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.3000 வழங்கினார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி., ஒன்றிய செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் வக்கீல் பகத்சிங், மாவட்ட குழு தோழர்கள் பி.அய்யணன், வி.ஜெயராம், அமுல்ராஜ், சுப்பிரமணி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.



◆ விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மேற்கு தேவதானம் கிளை செயலாளர் தோழர் மாரிமுத்து அவர்களின் மகள் எம்.கஸ்தூரி பி.காம் எல்.ரமேஷ் டிஎம்இ திருமண விழா நடைபெற்றது. மணமக்கள் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக 2500 வழங்கினார்கள். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ். எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுபாண்டி, ஒன்றிய செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி, வத்ராப் தாலுகா செயலாளர் கோவிந்தன். வத்ராப் பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி, ஒன்றிய கவுன்சிலர் வக்கீல் பகத்சிங், மாவட்ட குழு தோழர்கள் எஸ். ராஜா, பி.அய்யணன், மாயாண்டி, ஜெயராம், அமுல்ராஜ் உள்ளிட்ட முன்னணி தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்

# தள்ளுவண்டி தொழிலாளியின் வீட்டை கொளுத்தி தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்க கோரி சிபிஐ ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர்திருச்சி தேசிய நெடுஞ்சாலை புதுக்குடியில் சாலை ஓரம் தள்ளுவண்டியில் பானி பூரி கடை நடத்திவருபவர் ஸி.முருகையன்.இவர் புதுக்குடி வீரமாமுனி நகரில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார். இவரது வீட்டு கீற்று கொட்டகையை தீ வைத்ததோடு, வீட்டில் உள்ள பொருட்கள் மற்றும் வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.இந்த தாக்குதலில் மயிரிழையில் உயிர்பிழைத்த முருகையன் மற்றும் குழந்தைகளை அக்கம்பக்கத்தினர் துவாக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இச்சம்பவத்தில் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில்,தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்க்கு வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் குற்றவாளிகளை உடன் கைது செய்ய வலியுறுத்தி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் இரா.இராமச்சந்திரன் தலைமையில் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.பின்னர் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து குற்றவாளியை கைது செய்தனர்.

# மணப்பாறையில் வீரமங்கை வேலுநாச்சியர் படதிறப்பு

மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள விநாயகர் ஆலயம் அருகே, வீரமங்கை வேலுநாச்சியர் திருவுருவ படத்தை திறந்து வைத்து இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், தேசிய தலைவர்கள் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு முன்னால் நகர்மன்ற துணைத் தலைவர் ராம்மூர்த்தி தலைமை வகித்தார். வீரமங்கை வேலுநாச்சியர் திருவுருவ படத்தை சலவைத் தொழிலாளி பெரியசாமி திறந்து வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள், காங்கிரஸ் கட்சி பாண்டியன், காலவாய் பெரியசாமி உட்பட எம்.ஜிஆர் நகர் பகுதி மக்கள் மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

# இந்த வார தம்பிக்குறள்

### 143. புத்தறிவு

**புத்தம் புதுவுலகில் பூக்கும் புதுமகனே**
**புத்தம் புதுஅறிவைப் போற்று.**

புதிய அறிவுலகில் பிறந்திருக்கும் இளைஞனே (உலகை வாழ்விக்கும்) புதிது புதிதாகத் தோன்றும் அறிவினைப் பெறுக.

**புத்துலகைப் புத்துயிர் ஊட்டப் புதுஅறிவு**
**பூவுக்கு வண்டாம் புரி.**

தேன்வண்டு ஒவ்வொரு மலராகச் சென்று, தேன் எடுப்பது போல, புதிய உலகுக்குப் புதிய அறிவூட்டும் பணியில் ஈடுபடுக (உவமையணி).

# வேளாண் பயிர்களுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்



வேளாண் பயிர்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகையை பாதிப்பிற்கு ஏற்ப உயர்த்தி வழங்கிட என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் (பொறுப்பு) பி.எஸ். மாசிலாமணி தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட தொடர் பெருமழையினாலும்; வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட அனைத்து வகை சேதாரங்களுக்கும்... பேரிடர் வரன்முறையை தாண்டி நிவாரணத்தை உயர்த்தி வழங்கிட அறிவித்துள்ள தமிழக அரசை பாராட்டுகிறோம்.

குறிப்பாக 33 சதத்திற்கும்மேல் பாதிப்பிற்குள்ளான நெல்பயிர்களுக்கு ரூ.13500 என்பதை ரூ.17000 ஆகவும்; நீண்டகால பயிர்களுக்கு ரூபாய் 18000ல் இருந்து ரூ.22500 ஆகவும்; மானாவாவரி பயிர்களுக்கு ரூ7,410 என்பதை ரூ.8,500 எனவும்... இதுபோல் பிற பாதிப்புகளுக்குரிய நிவாரணமும் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் நெற்கதிர்கள் வெளிவரும் முதிர்ந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. சூல் கட்டும் பருவத்தில் உள்ள பயிர்களில் நெல்மணிகள் உருவாகாமல் பதராகத்தான் இனி வெளிவரும். கதிர் வந்தாலும் உதிர்ந்தும் பதராகி விடும். மானாவாரி புஞ்சை பயிர்களும் பல இடங்களில் மூழ்கி அழுகிவிட்டது. ஒரு ஏக்கர் நெல் பயிர் சாகுபடி செலவில் நான்கில் ஒரு பங்கே இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இது உரிய நிவாரணம் இல்லை.

எனவே நெல் பயிர் இழப்பிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 35 ஆயிரம்; மானாவரி குறுகிய கால பயிர்களுக்கு ரூபாய் 15,000 என உயர்த்தி வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இலங்கை கடற்படையின் அட்டுழியத்திற்கு முடிவு கட்ட வேண்டும்!

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

இலங்கை கடற்படையின் அட்டுழியத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடுமாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

மிக்ஜம் புயல் காரணமாக கடலுக்குள் செல்ல வேண்டாம் என மீனவர்கள் எச்சரிக்கப்பட்ட நிலையில், புயல் ஓய்ந்த நிலையில் தற்போது தான் தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்கிறார்கள்.

கடந்த டிசம்பர் முதல் தேதி முதல் கடலுக்கு சென்று தொழில் செய்ய முடியவில்லை, எவ்வித வருமானமும் இன்றி அவதியுற்று வந்த மீனவர்களுக்கு மேலும், மேலும் நெருக்கடிகள் தொடர்கின்றன.

இயற்கை சீற்றத்தால் ஏற்படும் துன்பம் ஒரு பக்கமெனில், இலங்கை கடற்படையால் அவ்வப்போது ஏற்படும் செயற்கை நெருக்கடி மிகக் கொடிய துன்பமாகும்.

கடந்த 8ம் தேதி, நடுக்கடலில் நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படை மிருகத்தனமாக தாக்கி அவர்கள் பிடித்த மீன் மற்றும் நண்டுகளையும் மீன்பிடி வலையையும் பறித்து சென்றனர்.

படுகாயமுற்ற மீனவர்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மீண்டும் நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை, நம்பியார் நகர், மயிலாடுதுறை மாவட்டம் திருமுல்லைவாசல் மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்த 25 மீனவர்களை கைது செய்தும், இரு படகுகளை பறிமுதல் செய்தும் உள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டும், கைது செய்து சிறையில் அடைப்பதுடன் அவர்களது மீன் வலைகள், படகுகள் என அனைத்தையும் பறிமுதல் செய்து செல்கின்றனர்.

இராமேஸ்வரம் மீனவர்களின் படகு மீது, இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதி, படகு சேதமானதுடன், இரு மீனவர்கள் காயம் பட்டுள்ளனர்.

தமிழக புதுச்சேரி மீனவர்களுக்கு தொடர்ந்து இலங்கை கடற்படையால் இழைக்கப்பட்டு வரும் அட்டூழியங்கள் தொடர்கதையாக உள்ளது.

தமிழக, புதுச்சேரி மீனவர்களை ஒன்றிய அரசு இந்திய குடிமகன்களாக கருதவில்லையோ என்ற கேள்வி எழுகின்றது.

பகை நாடு எனக் கருதப்படும் பாகிஸ்தான் கடல் பகுதிக்கு மீன்பிடிக்க செல்லும் இந்திய மீனவர்களுக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படுவது இல்லை. ஆனால் நட்பு நாடு எனக் கூறப்படும் இலங்கை கடற்படையால் தமிழக, புதுவை மீனவர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அட்டூழியங்களுக்கு ஒன்றிய அரசு முற்றுப்புள்ளி வைக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வெள்ள நிவாரண அறிவிப்புக்கு வரவேற்பு! பயிர் இழப்பீட்டை உயர்த்துக!

## இரா.முத்தரசன் அறிக்கை

தமிழ்நாடு அரசின் வெள்ள நிவாரண அறிவிப்பை வரவேற்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

மிக்ஜாம் புயலின் காரணமாக தமிழ்நாட்டின் வட மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்ட மக்களின் சமூக வாழ்க்கை முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது. உயிரிழப்புகள், உடைமை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. வரலாறு காணாத பெருமழை 24 மணி நேரத்தில் தொடர்ந்து கொட்டியதால் சென்னை பெருநகரமே மிதக்கும் சூழல் ஏற்பட்டது.

நிவாரண பணிகளுக்காக ரூபாய் 5000 கோடி வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம், தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்துள்ளது. ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் ராஜநாத் சிங், நேரடியாக வந்து வானில் பறந்து நிலைமையை பார்வையிட்டும் சென்றிருக்கிறார். ஆனால் வெறும் 450 கோடி ரூபாய் வழங்குவதாக ஒன்றிய அரசு அறிவித்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாகும். இது யானை பசிக்கு சோளப்பொறி கொடுப்பதைப் போன்றதாகும்.

ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை மூலம், மாநில அரசுகளுக்கு எந்த வருவாயும் இல்லாத வகையில் ஒன்றிய அரசே வரி வசூலித்துச் சென்று விடுகிறது. இந்தியாவில் அதிக வரி செலுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று. அந்த மாநில மக்கள் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிற்கும்போது, உரிய நிவாரணம் வழங்க ஒன்றிய அரசு மறுப்பது அடாவடி செயலாகும்.

கடுமையான நிதி பற்றாக்குறைக்கு தமிழ்நாடு ஆட்பட்டுள்ளது. ஆனாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் கடமையை தமிழ்நாடு அரசு உணர்ந்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

இந்த புயல், வெள்ளப்பெருக்கால் இறந்தவர்கள், கால்நடைகள் ஆடுகள் இழப்பு, பாதிக்கப்பட்ட இயந்திரப் படகுகள், வல்லங்கள், கட்டு மரங்கள், குடிசை வீடுகள் ஆகியவற்றுக்கு நிவாரணத் தொகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டைகளுக்கு ரூபாய் 6000 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிர் இழப்பீடு நிவாரணமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.17,000 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது குறைவானதாகும். விவசாயிகள் பெருமளவில் இழப்புக்கு உள்ளானதைப் பரிசீலித்து ஒரு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறோம்.

இதே போல சிறு, குறு தொழில்களும், பதிப்பகங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. நடைமுறை மூலதனத்தை இழந்து தொழில் செய்ய முடியாத அளவுக்கு பெருத்த பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால், தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்து அவற்றுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். அதேபோல பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் குறிப்பாக இருசக்கர வாகனங்கள் ஓட்ட முடியாத அளவுக்கு பழுதுபட்டுள்ளன. இவற்றுக்கும் நிவாரணம் வழங்குவது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒரு மாத ஊதியம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன் (திருப்பூர்), எம். செல்வராசு (நாகபட்டினம்), சட்டமன்ற உறுப்பினர்கள் தி.இராமச்சந்திரன் (தளி) மற்றும் க.மாரிமுத்து (திருந்துறைப்பூண்டி) ஆகியோர் சென்னை பெரு மாநகர் மற்றும் புறநகர் மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசுக்கு உதவும் வகையில், முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று ஒரு மாத ஊதியத்தை வழங்குவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அஞ்சல் அலுவலக மசோதாவில் இரகசிய அம்ச இணைப்புக்கு எதிர்ப்பு

## பாராளுமன்றத்தில் சிபிஐ பி.சந்தோஷ் குமார் எம்பி பேச்சு

அஞ்சல் அலுவலக மசோதா 2023ன் மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு உறுப்பினர் பி. சந்தோஷ் குமார், இந்த மசோதாவின் பெயரை இந்தியில் மாற்றாமல் அப்படியே ஆங்கிலத்தில் தொடர்வதற்காக முதலில் நன்றி. உலகின் மிகப் பெரிய முறைமையான அஞ்சல் அலுவலகச் சேவையை நவீனப்படுத்துவதற்கான அனைத்து முன்னெடுப்புகளும் வரவேற்கத் தக்கவை. ஆனால் மசோதாவின் தற்போதைய வடிவில் அதனை, குறிப்பாக மசோதாவின் பிரிவு 9 மற்றும் அதன் துணை அம்சங்களுடன், மசோதாவை ஆதரிக்கும் நிலையில் நாங்கள் இல்லை என்றார்.

மசோதாவின் அம்சம் 9 மற்றும் அதன் துணை ஷரத்துகள் நமது அஞ்சல் அலுவலகத்தை பெகாசஸ் அலுவலகமாக நிச்சயம் மாற்றிவிடும். வாழ்வின் ஒவ்வொரு மற்றும் அனைத்து அம்சங்கள் மற்றும் அமைப்புகள், ஏன் தேசப் பாதுகாப்பு என்பதுடன் தொடர்பு படுத்தப்பட வேண்டும். தேசப் பாதுகாப்பு என்ற பெயரிலான கருத்தோட்டம் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடும். அரசு பலமுறை அதனைத் தவறாகப் பயன்படுத்தியது. மசோதாவில் இக்குறிப்பிட்ட அம்சத்தை நீக்கும்படி அவர் அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

இரண்டாவதாக, அஞ்சல் முறையை நவீனப்படுத்தும் செயலில் தபால் துறைக்குச் சொந்தமான பயன்படுத்தாத நிலம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். தபால் துறை வசம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல ஏக்கர்கள் நிலம் உள்ளது. உதாரணத்திற்கு, கொச்சியில் ஓர் ஏக்கருக்கும் அதிகமான பயன்படுத்தாத காலிமனை அவர்களிடம் உள்ளது. அந்த அஞ்சல் நிலத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் பிரிவுகள் மசோதாவில் இணைக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, இந்திய அஞ்சல் சேவை, இப்பகுதியின் மொத்தச் செயல்பாட்டில் 15 சதவீதத்தையும், மீதி 85 சதவீதம் தனியார் (கூரியர்) கைகளிலும் உள்ளது. தனியார் செயல்பாட்டாளர்களைக் கட்டுப்படுத்தும் அம்சங்கள் எதுவும் அரசிடம் உள்ளதா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இல்லை எனில், இரகசியம் மற்றும் தனியுரிமை என்பதற்கு எந்த மதிப்பும் இல்லை. வாடிக்கையாளர்கள் நிச்சயம் தனியாரிடம் நாடிச் செல்வார்கள். எனவே தபால் பணி மேற்கொள்கொளும் தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்த ஏதாவது செய்தாக வேண்டும்.

நமது அஞ்சல் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு ஆதரவாக நாங்கள் இருந்தாலும், அரசு மேற்கண்ட அனைத்துக் கவலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அஞ்சல் ஊழியர்களைப் பொருத்த வரை, நூற்றுக் கணக்கான பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன. அந்த இடங்களை உடனடியாக நிரப்பிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தபால் சேவையின் சல்லிவேர் மட்டத்திலான இந்தத் தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

## சத்தியமங்கலம் தாலுகா அலுவலகத்தில்

# வீட்டுமனை பட்டா கேட்டு 3000 பேர் பெருந்திரள் முறையீடு



வீட்டுமனை பட்டா கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சத்தியமங்கலம் தாலுகா அலுவலகத்தில் 3000 திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்று கூடி பெருந்திரள் முறையீடு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வருவாய்த்துறை சார்பில் கடந்த செப்டம்பர் மாதத்தில், சத்தியமங்கலம் தாலுகாவிற்கு உட்பட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களில் பொதுமக்கள் வீட்டுமனை பட்டா மற்றும் நிலவு சம்பந்தப்பட்ட பல்வேறு பட்டா பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இதில் சத்தியமங்கலம் தாலுகாவில் மட்டும் 3400 பொதுமக்கள் வீட்டுமனை பட்டா கேட்டு மனு அளித்திருந்தனர். இந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் வருவாய்த்துறை அதிகாரிகள் மெத்தனம் காட்டி வந்தனர்.

இதை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சத்தியமங்கலம் தாலுக்கா அலுவலகத்திம் முன்னர் முன்னாள் எம்எல்ஏ பி.எல்.சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், சத்தியமங்கலம், பவானிசாகர், புஞ்சைபுளியம்பட்டி, கடம்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்டோர், ஏற்கனவே கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து சத்தியமங்கலம் தாசில்தார் மாரிமுத்து போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேசும் போது, செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட வீட்டுமனை பட்டா குறித்த மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதில் ஆயிரம் மனுக்கள் ஏற்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள மனுக்கள் மீது நேரில் ஆய்வு செய்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விரைவில் அனைவருக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

இந்தப் போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் கே.சக்திவேல், தொழிற்சங்க தலைவர் ஆர்.ஸ்டாலின் சிவகுமார், சத்தியமங்கலம் நகர செயலாளர் ஜமேஷ், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.சுரேந்தர், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ், பவானிசாகர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.ஏ.வேலுமணி, தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.மகேந்திரன், கடம்பூர் ராமசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஈரோடு மாவட்ட தலைவர் மு சரவணகுமார், இந்திய தேசிய மாதர் சங்க தலைவர் கா. மல்லிகா வாசு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

16 ஆம் பக்க தொடர்ச்சி



ராஜேந்திரன் மறைவுக்கு கோவை ஜீவா இல்லம் முன்பு நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் பேசியதாவது. “ நாட்டில் ஏற்பட்டிருக்கிற வலதுசாரி பேரபாயத்திற்கு எதிராக, இடதுசாரி ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து போராட வேண்டிய சூழ்நிலையில், அதற்கு வழி நடத்துகிற பயிற்சியும் பக்குவமும் பெற்ற ஒரு தோழர், கானம் ராஜேந்திரன். அவரது மறைவு நமக்கு பெரும் பேரிழப்பாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் கேரள மாநில கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறும் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறும் ஒருங்கிணைந்த வரலாறு ஆகும்.

கேரள கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியை கட்டி அமைப்பதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

அந்த மகத்தான தலைவர்களின் வரிசையில் பழைய தலைமுறையோடு இணைந்து செயல்பட்டு, அவர்களது வரலாற்றுத் தொடர்ச்சியாக விளங்கி வந்தவர் தோழர் கானம் ராஜேந்திரன் அவர்கள்.

வெளியம்பார்க்கவன், சி.கே.சந்திரப்பன், என்.இ.பலராம் போன்றவர்களிடத்திலே நெருங்கி பழகி, அவர்களோடு இணைந்து பணியாற்றிய சக தோழராக இருந்தவர், மிக இளம் வயதிலேயே தோட்டத் தொழிலாளர் குடும்பத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்தவர் தோழர் கானம் ராஜேந்திரன்.

2015 ம் ஆண்டு கட்சியின் மாநில செயலாளராக தேர்வு செய்யப்பட்டு இன்றுவரை செயல்பட்டு வந்தவர், இன்று நம்மோடு இல்லை.

அவரது மறைவு நமக்கெல்லாம் பேரிழப்பாகும். அவருக்கு தமிழ்நாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செவ்வணக்கம் செலுத்துகிறது. அவரை இழந்து வாடும் கேரள மாநில கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு கட்சி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி தனது அஞ்சலி உரையில் கூறினார்.

இந்த அஞ்சலி நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சி.சிவசாமி துவக்க உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வி.எஸ்.சுந்தரம், கே.எம்.செல்வராஜ், பி.மௌனசாமி, கே.ரவீந்திரன், எஸ்.மோகன், சாந்தி சந்திரன், வி.ஆர்.பாண்டியன், மு.வ.கல்யாணசுந்தரம், கே.வெங்கடாசலம், மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், வழக்கறிஞர் கே.சுப்பிரமணியம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ப.பா.ரமணி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஏ.அசரப் அலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்ட தலைவர் ஜே.கலா, ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட பொருளாளர் பி.சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாநகர்

திருச்சி மாநகர் மாவட்டக் குழுவின் சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில பொதுச் செயலாளர் த.அறம், கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்டப் பொருளாளர் சொக்கி.சண்முகம், பகுதி குழு செயலாளர்கள் ஏ.அஞ்சுகம், எஸ். சையது அபுதாஹிர், எம்.ஆர்.முருகன், மாணவர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார், ஏஐடியுசி போக்குவரத்து மாவட்ட செயலாளர் எம் .சுப்பிரமணி, கலை இலக்கியப் பெருமன்ற புறநகர் மாவட்ட செயலாளர் லெனின், ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்க மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சூர்யா, புறநகர் மாவட்ட செயலாளர் செல்வராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

### திருவனந்தபுரம்

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திருவனந்தபுரம் பட்டத்திலுள்ள ஏ.ஐ.டி.யு.சி அலுவலகத்தில் மறைந்த தோழருக்கு செவ்வணக்கம் செலுத்தப்பட்டது.இந்த நிகழ்வில் தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி.யின் மாநிலத்தலைவர் காசி விஸ்வநாதன், கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், குமரி மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் சஜேஷ், மாவட்டத்தலைவர் கிருஷ்ணகுமார், கட்சியின் நெல்லை மாவட்ட துணை செயலாளர் சேதுஇராமலிங்கம், நெல்லை இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் நண்பா முத்துகிருஷ்ணன் ஆகியோர் வீரவணக்கம் செலுத்தினர்.



### தஞ்சை வடக்கு

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் மாநகர குழு மற்றும் ஒன்றிய குழு சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.பாலன் தலைமையில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், ஏஐடியூசி மற்றும் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் க.சுந்தர்ராஜன், ப.சரணவனகுமார், ஆர்.கே. ரவீந்திரன், சி.ராயப்பன், கே.சரவணன், ஜெ.ஆர்.குமார், க.கோவிந்தன், ஆர்.கே. கலையரசன், வி.காமராஜ், எம்.மணி உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

### தஞ்சை தெற்கு

தஞ்சாவூர் கட்சி அலுவலகத்தில் அஞ் சலி நிகழ்ச்சி நடைபெற்றது. தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளர் முத்துஉத்ராபதி தலைமை வகித்தார். நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் ஆர்.இராமச்சந்திரன், சோ பாஸ்கர், சி. பக்கிரிசாமி, ஆர்.ஆர்.முகில், ம.விஜயலட்சுமி, ஏ ஐ டி யூ சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட செயலாளர்கள் துரை.மதிவாணன், நிர்வாகிகள் பி.சுதா, கே.கல்யாணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 16.12.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57










முத்தமிடும் பினாய் விஸ்வம்

மிகப்பெரிய பங்களிப்பு அவருடையது. இந்தியாவிலேயே முதல்முறையாக அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சட்டம் இயற்றப்படுவதற்கும், பல்வேறு நல வாரியங்கள் அமைக்கப்படுவதற்கும் அவர் ஒரு முக்கிய காரணமாக இருந்தார்.

2015ம் ஆண்டிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளராக மூன்று முறை தேர்வு செய்யப்பட்டார். கட்சி தேசிய செயலாளர்களில் ஒருவராகவும் இருந்தார்.

கேரளா மாநிலத்தை ஆளுகிற இடதுசாரி ஜனநாயக முன்னணியில், முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு அடுத்தபடியாக செல்வாக்கும் வலிமையும் உள்ள தலைவராக கானம் ராஜேந்திரன் விளங்கினார்.

செவ்வணக்கம் தோழர் கானம் ராஜேந்திரன் !

**பாலன் இல்லம், சென்னை**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர், தோழர் கானம் ராஜேந்திரன் காலமானார். அவரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது. மேலும் மாநிலக் குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் அவரது உருவப் படத்திற்கு இன்று (09.12.2023) காலை மலர் அஞ்சலி

அவர் முழுமையான ஈடுபாடும், அர்ப்பணிப்பும் கொண்ட உறுதியான மனிதர். அவர் கேரளாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையும், இடதுசாரி ஒற்றுமையையும், இடது ஜனநாயக முன்னணியையும் பெரிதும் வலிமைப்படுத்தினார்

அவரது தலைமையில்,உறுப்பினர் எண்ணிக்கையிலும், வலிமைமிக்க போராட்டங்களாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெரும் முன்னேற்றத்தை கண்டது.

என் அஞ்சலி.

– இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
பொதுச் செயலாளர்
**டி ராஜா**

“அவரது மறைவின் மூலம், கேரளாவில் இடதுசாரி ஒற்றுமையின் வலுவான தூண்களில் ஒன்றை இழந்துவிட்டோம். கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் தொழிலாளர் ஒற்றுமையையும் வலுப்படுத்துவதிலும், ஜனநாயக அமைப்புகளை நிலை நிறுத்துவதிலும், மதச்சார்பற்ற விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் அவரது பங்களிப்புகள் இணையற்றவை”

– கேரள முதல்வர்
**பினராயி விஜயன்**

செலுத்தப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலத் துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் சந்தானம், மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ரவீந்திரநாத், ஏழுமலை, மாவட்டச் செயலாளர்கள் வெங்கடேஷ் வேம்புலி, எஸ்.கே.சிவா உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**கோவை**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் கானம்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

1ஆம் பக்க தொடர்ச்சி

படித்துக் கொண்டிருந்தபோது, 18 வயதிலேயே அவரது அரசியல் பயணம் தொடங்கிவிட்டது.

23ஆம் வயதில் அவர் அனைத்திந்திய இளைஞர் மன்றத்தின் கேரள மாநிலச் செயலாளர் ஆனார்.

அவரது தந்தை தேயிலைத் தோட்டத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார். சின்ன வயதிலேயே தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் துயரங்களையும் அவர்களுடைய போராட்டங்களையும் அறிந்து வளர்ந்தவர் கானம்.

அவரது 26 வது வயதிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயற்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அச்சுத மேனன், எம். என். கோவிந்த நாயர் உள்ளிட்ட புகழ் பெற்ற தலைவரோடு சேர்ந்து பணிபுரிந்த இளைஞர் அவர்.

யாரொருவரிடமும், என்ன பேச வேண்டுமோ அதை ஒளிவு மறைவின்றிப் பேசி கட்சியை முன்னெடுத்துச் சென்ற தலைவர் தோழர் கானம் ராஜேந்திரன். அதிகமாகப் பேசுவதைத் தவிர்த்து செயல்பாடுகளை அதிகப்படுத்துவதிலேயே கூர்மையான கவனத்தைச் செலுத்தியவர். தான் சொல்வதே சரி என ஒருபோதும் நினைத்தவரில்லை. எல்லோரிடமும் கருத்துக்களைக் கேட்டு, ஒருங்கிணைத்துச் செயல்படுத்திய ஜனநாயகவாதி அவர்.

குரல் எழுப்ப முடியாத அடித்தட்டு மக்களின் துயரங்களை உரத்த குரலில் எப்போதும் பேசியவர்.

மலையாள திரைப்படத் தொழிலாளர்களுக்கான அமைப்பைக் கட்டி, போராடியவர். நன்கறியப்பட்ட நடிகர்களான திலகர், வினயன் ஆகியோர் அவரது போராட்டங்களோடு இணைந்து நின்றனர். லைட் மேன் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வைத்து, அதனை அமுலாக்கியதில் பெரும் பங்கு வகித்தவர். அவர்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக, ஒரு கட்டத்தில் மலையாள நடிகர்கள் சங்கம், தயாரிப்பாளர் சங்கம் ஆகியவற்றை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்து, பல நாட்கள் படப்பிடிப்பே இல்லாத நிலையை ஏற்படுத்தவும் அவர் தயங்கவில்லை.

வாழூர் தொகுதியிலிருந்து கேரளா சட்டப்பேரவைக்கு இருமுறை தேர்வு செய்யப்பட்டவர்.

அவர் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த போது, கட்டடத் தொழிலாளர்களுக்காக தனிநபர் சட்ட மசோதாவைப் கொண்டு வந்தார். அதன் தொடர்ச்சியாகத்தான், இந்தியாவிலேயே முதல் முறையாக கேரளாவில் கட்டட தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டது. அதனை முன்னுதாரணமாக கொண்டுதான் பின்னர் தமிழ்நாட்டில் வாரியம் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகள் கழிந்த பின்பு மத்திய சட்டம் உருவாக்கப்பட்டது.

ஏஐடியுசி யின் கேரள மாநில பொதுச் செயலாளர் ஆகவும், தேசிய செயலாளர்களில் ஒருவராகவும், தேசியத் துணைத் தலைவராகவும் அவர் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

அமைப்புசாரா தொழிலாளர்களை திரட்டுவதில் கேரளாவில்

## தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம்

சிபிஐ கேரள மாநில செயலாளர் கானம் ராஜேந்திரன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், கேரள மாநிலச் செயலாளருமான தோழர்.கானம் ராஜேந்திரன் (73) 08.12.2023 அன்று எர்ணாகுளம் மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம், கூட்டிக்கல் கிராமத்தில் வி.பரமேஸ்வரன் நாயர், செல்லம்மாள் தம்பதிக்கு மகனாக 1950 நவம்பர் 10 ஆம் தேதி பிறந்த கானம் ராஜேந்திரன் பள்ளியில் பயிலும் காலத்தில், தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் ஏற்படுத்திய தாக்கத்தால் கம்யூனிஸ்டு இயக்கத்தை தேர்வு செய்தவர்.

கல்லூரியில் பயின்ற காலத்தில் மாணவர் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர். பின்னர் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் கேரள மாநிலச் செயலாளர், தேசிய துணைத் தலைவர் போன்ற பொறுப்புகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டவர்.

தொழிற்சங்க அரங்கில் பல்வேறு பிரிவு தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கி உரிமைகளுக்கு போராடியவர்.

கோட்டயம் மாவட்டம், வாழூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்வு பெற்று, 1982 முதல் 1991 வரை சிறப்பாக செயல்பட்டு முத்திரை பதித்தவர். கட்டுமானத் தொழிலாளர் சமூக பாதுகாப்புக்காக இவர் அறிமுகப்படுத்திய மசோதா மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பொறுப்பில் செயல்பட்டு வரும் கானம் ராஜேந்திரன், இடதுசாரி ஜனநாயக முன்னணியின் சக்தி வாய்ந்த தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் நடந்த கட்சியின் தேசிய மாநாட்டில் தேசிய செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டவர்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் இடதுசாரி ஜனநாயக முன்னணி மக்களின் ஆதரவுடன் மாபெரும் வெற்றி பெற பெரும் பங்காற்றியவர்.

வகுப்புவாத சக்திகளை ஒன்றிய அரசு அதிகாரத்திலிருந்து அகற்றவும், அரசியல் அமைப்பு முறையை பாதுகாக்கவும் தீவிரமாக போராடி வரும் கால சூழலில் கானம் மறைவு எளிதில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது வாழ்விணையர் வனஜா ராஜேந்திரன், இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் இருக்கின்றனர்

மறைந்த தோழர்.கானம் ராஜேந்திரன் நினைவுகளை நெஞ்சில் ஏந்தி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அவரது மறைவுக்கு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கேரளா மாநில தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் மறைவுக்கு ஒரு வார காலம் துக்கம் கடைப்பிடிக்கும் வகையில் தமிழ்நாட்டில் கட்சிக் கொடிகள் அரைக் கம்பத்தில் இறக்கி அஞ்சலி செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

– இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மாநிலச் செயலாளர்
**இரா.முத்தரசன்**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.